Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | பிரமோதூத ஹூ சித்திரை மீ 01 ஆம் உ | சனிக்கிழமை | (14 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 17 | ஓசை 55

## வரலாற்றுக் கடமையை தியாகங்கள் மூலம் நிறைவேற்றியுள்ளோம்!




(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை இந்திய வல்லாதிக்கப் பூதத்திடமிருந்து காப்பாற்ற வேண்டிய வரலாற்றுக் கடமை எம்மீது சுமத்தப்பட்டது. எமது கடமையை எமது போராளிகளினதும் மக்களினதும் அளப்பரிய தியாகங்களால் நாம் செய்து முடித்துள்ளோம் தமிழீழவிடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் கோ. மகேந்திரராசா தமிழீழ மக்களுக்கு விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்,

(8ஆம் பக்கம் பார்க்க)

# புனரமைப்புத் துரிதம்; காவல் நிலையம் திறப்பு!



நல்லூரில் நடந்த பேச்சுவார்த்தையின் போது தலைவர் பிரபாகரனும், விடுதலைப் புலிகள் குழுவினரும், அமைச்சர் ஹமீத்தும்

## பிரபா - ஹமீத் பேச்சில் இணக்கம்; புலிகள் பாதுகாப்பில் மந்திரி வந்தார்!

(யாழ்ப்பாணம்)

புனர் நிர்மாண நடவடிக்கையைத் துரிதப்படுத்தல், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களைத் திறத்தல் ஆகிய இரு அம்சங்கள் பற்றியும் நேற்று தலைவர் பிரபாகரனுக்கும், நீதியமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்திற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவாத்தையின் போது இணக்கம் காணப்பட்டது.

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த நீதி அமைச்சர் ஜனாப். ஏ. சி. எஸ். ஹமீத் தலைவர் பிரபாகரனை நல்லூரில் காலை பத்து மணியளவில் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பு மூன்றரை மணி நேரம் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் தலைவர் பிரபாகரனுடன் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, பொதுச் செயலாளர் யோகரெட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்

(8ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் தட்டுப்பாடு நீங்கியது

(வட்டுக்கோட்டை)

யாழ். குடாநாட்டில் கடந்த சில நாட்களில் நிலவிவநத எரிபொருள் தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

புதுவருடத்தை முன்னிட்டு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை நாட்களிலும் போதியளவு எரிபொருள் வழங்கப்படுமென உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## யாழ். வைத்தியசாலையில் வாகன நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலையில் கடந்த பத்து வருடங்களாக வாகன தட்டுப்பாடு நிலவி வருகிறது, இதனால் சிறுசிறு தேவைகளுக்கும் அம்புலன்ஸ் வண்டிகளே பாவனைக்குட் படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலைபற்றி யாழ். வைத்தியசாலை நிர்வாக அதிகாரி கருத்து தெரிவிக்கையில் விசேட சிகிச்சைக்காக கொழும்புக்கு ஓர் நோயாளியை அனுப்புவது மிகக் கஷ்டமாக உள்ளதாகவும் தற்போது இருக்கும் இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள் நல்ல நிலையில் இல்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன் வைத்திய சாலைக்கு தேவையான சிறு உபகரணங்கள் வாங்குவதற்கென்றாலும் அல்லது ஒரு


(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை தீவைப்புச் சம்பவம் சந்தேக நபர்கள் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில் புகையிரத நிலையத்துக்கு அருகில் பட்டப் பகலில் மூன்று ஓலை வீடுகளைக் கொளுத்தினார்

வீட்டில் ஏற்பட்ட தீ மற்ற வீடுகளுக்கும் பரவியதாகப் பொலிஸ் தரப்பில் சொல்லப் படுகிறது. குடிசைகளில் இருந்தவர்கள் தமது உடைமை



## தமிழ்ப் பகுதி எங்கும் புத்தாண்டுக் குதூகலம்

தமிழ்ப்பகுதிகளில் இம்முறை புத்தாண்டு மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது


கொண்டிருந்தனர்.

இந்நகரங்களில் நேற்று நள்ளிரவு

...ணத்திற்கு விஜயம் செய்த நீதி அமைச்சர் ஜனாப். ஏ. சி. எஸ். ஹமீத் தலைவர் பிரபாகரனை நல்லூரில் காலை பத்து மணியளவில் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பு மூன்றரை மணி நேரம் நடைபெற்றது.

...தலைப் புலிகள் தரப்பில் தலைவர் பிரபாகரனுடன் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, பொதுச் செயலாளர் யோகரெட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்

(8ஆம் பக்கம் பார்க்க)



நல்லூர்ச் சந்திப்பின்போது தலைவர் திரு. வே.பிரபாகரன், நீதியமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா

...யாழ். வைத்தியசாலையில் கடந்த பத்து வருடங்களாக வாகன தட்டுப்பாடு நிலவி வருகிறது, இதனால் சிறுசிறு தேவைகளுக்கும் அம்புலன்ஸ் வண்டிகளே பாவனைக்குட் படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலைபற்றி யாழ். வைத்தியசாலை நிர்வாக அதிகாரி கருத்து தெரிவிக்கையில் விசேட சிகிச்சைக்காக கொழும்புக்கு ஓர் நோயாளியை அனுப்புவது மிகக் கஷ்டமாக உள்ளதாகவும் தற்போது இருக்கும் இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள் நல்ல நிலையில் இல்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன் வைத்தியசாலைக்கு தேவையான சிறு உபகரணங்கள் வாங்குவதற்கென்றாலும் அல்லது ஒரு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை தீவைப்புச் சம்பவம் சந்தேக நபர்கள் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில் புகையிரத நிலையத்துக்கு அருகில் பட்டப் பகலில் மூன்று ஓலை வீடுகளைக் கொளுத்தினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஒரு பெண் உட்பட ஐந்து பேரைப் பொலிஸார் விசாரணைக்காகத் தடுத்து வைத்துள்ளார்கள்.

மூன்றுகுடிசைகளும் கிட்டக் கிட்ட இருந்ததாகவும், ஒரு வீட்டில் ஏற்பட்ட தீ மற்ற வீடுகளுக்கும் பரவியதாகப் பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது. குடிசைகளில் இருந்தவர்கள் தமது உடைமைகளை மீட்கக்கூடியதாக இருந்ததாம்.

தீவைப்புச் சம்பவத்தை நிரூபிக்கச் சாட்சிகள் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழ்ப் பகுதி எங்கும் புத்தாண்டுக் குதூகலம்

தமிழ்ப்பகுதிகளில்இம்முறை புத்தாண்டு மிகக் கோலாகலமாகக்கொண்டாடப்படுகிறது மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என வடக்குக் கிழக்கு மாகாணங்களின் முக்கிய நகரங்களில் ஆண்கள், பெண்கள் குழந்தைகள் கூட்டங்கூட்டமாகக் கடைகளிலும் சந்தைகளிலும் ஏறி இறங்கிக் கொண்டிருந்தனர்.

இந்நகரங்களில்நேற்று நள்ளிரவுவரைக்கடைகள் திறந்துவியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்காக இந்நகரங்களில் கடைகள், வீதிகள் யாவும் வர்ண மின விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருக்கின்றன,

# யாழ். வங்கிகளில் இன்று கைவிசேஷம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல வங்கிகளிலும் இன்று புதுவருட தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இலங்கை வங்கி இம்முறை கைவிசேடம் மற்றும் சேமிப்பு சான்றிதழ் வழங்குதல் போன்ற கருமங்களை நடாத்தவுள்ளது, முன்னர் மக்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

வாசக நேயர்கள், வர்த்தக அன்பர்கள் விற்பனை விநியோக ஆதரவாளர்கள் அனைவருக்கும் ஈழநாதம் தனதுளம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றது.

# சுதந்திர ஒளியை அன்னிய இராணுவத்தால் மறைக்க முடியாது

(மன்னார்)

''இருளின் ஆட்சிக் காலம் சில காலம் நீடித்தாலும் மொழியையே மக்கள் நேசிக்கின்றார்கள். தமிழ் மக்களின் சுதந்திர ஒளியினை அன்னிய இந்திய இராணுவ இருள் மறைத்துவிட முடியாது என்பதனை அன்னை பூபதியின் தியாகம் உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றது'' என நேற்று முன்தினம் அடம்பனில் அன்னை பூபதியின் நினைவு உண்ணாவிரத அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் திரு. அ. சுரேஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் அன்னை பூபதியின் தியாகம் உலகில் ஒதுக்கப்பட்ட மகளிருக்கு முதல் அடிச்சுவடு என்றும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து பேசிய அடம்பன் பிரதேச விடுதலைப் புலிகள் மக்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

# இப் புத்தாண்டில் மக்கள் நிம்மதியுடன் வாழ வழி செய்வோம்

- கரிகாலன்



(காத்தான்குடி)

கடந்த பல ஆண்டுகளாக இன்னல் பலவற்றை தொடர்ச்சியாக அனுபவித்து வரும் தமிழ்பேசும் மக்கள் இப்புத்தாண்டு முதலாவது முழு நின்மதியுடன் வளர வழி செய்வோம். பேரின வாதத்தால் அடக்கப்பட்ட சமூகம் தன் உயிரை இரந்தாவது உரிமைகளைப் பெற அன்று போர்க் கோலம் பூண்டது. அதன் விளைவாக தாங்கமுடியாத இழப்புக்கள் பலவற்றைத் தாண்டி உத்தியோகப் பற்றற்றஉரிமைகளைப்பெற்ற சமூகமாக இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரதித் தலைவர் கரிகாலன் தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்

மேலும் தனது செய்தியில் ஜனநாயகச் சிந்தனையுடன் தமிழ் பேசும் சமூகத்தின் உரிமைகளை பூரணமாகவும் அதிகார பூர்வமாகவும் மிக விரைவில் பெற்றெடுப்போம். என்று மலரும் புத்தாண்டு

(8ஆம் பக்கம் பார்க்க)

# கொள்ளையும் கொலையும்

(பதுளை)

ஊவா பரணகமமக்கள்வங்கி கிளையில் நேற்று ஆயுதந் தாங்கிய நால்வர் திடீரெனப் புகுந்து கொள்ளையடிக்க முற்பட்டபோது காவலாளி ஒருவர் கொல்லப்பட்டார். கொள்ளையர் பத்தாயிரம் ரூபாயுடன் தப்பிச்சென்றனர்.

# சுயதோழில் நிவாரண அட்டை சாராயக் கடையில் அடைவு

(வண்ணார்பண்ணை)

ஒன்றிணைக்கப்பட்ட புனர் வாழ்வு. புனரமைப்புக்கான நன்கொடை ரூபா நாலாயிரம் பெறுவதற்கு உதவி அரசாங்க அதிபரினால் சிபார்சு செய்யப்பட்ட குடும்பப் பதிவு அட்டைகள் சில பணத்தை வங்கியில் பெறுவதற்கு முன்னரே அடைவுக்கு சென்றுள்ளன. மதுப்பிரியர் ஒருவர் தம் மனைவிக்குத் தெரியாமல் சட்ட விரோத மது வடிக்கும் இடத்தில் இவற்றை அடைவு வைத்துக் குடித்துள்ளார்.

இவ்வட்டைகளுக்குத் தற்போது நாலாயிரம் வழங்கப் பட்டு வருவதால் பிரச்சினை அம்பலத்திற்கு வந்து, கிராம சேவையாளருக்கு முறையீடு

(8ஆம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் எமது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உங்களது நயம், நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

தங்கப் பவுண் நகை வியாபாரம்

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

·7 0)

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

# ரூபி ஜுவல்லறி

# Rube Jewellery

111/1 KASTURIAR ROAD JAFFNA.

நவநாகரிக டிசைன்களுக்கு உத்தரவாதத்திற்கு உறுதியா ன வேலைக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

சுத்தமான 22 கரட் தங்கத்தில் குறித்த தவணையில் நகைகள் செய்து கொடுக்கப் படும்

(B-741) தொலைபேசி: 22744

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

கோப்பாய் கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் திலீபன் ஒழுங்கையில் 3 அறைகளுடன் கூடிய புதிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. N. கனகலிங்கம், நாமகள் லேன் பொற்பதிறோட், கொக்குவில் கிழக்கு.

B/745

தனிச் சீனியில் அரைத்த ஐசிங் சுகர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M.G.M. 777 K.K.S. Road Jaffna. (B-768)

யாழ் நகரில் சகலவிதமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள DıLKA WATCH WORKS, Opposite Bus Stand, Jaffna (குறிப்பு) சகல ,சீக்கோ' சிற்றிசன் உதிரிப்பாகங்களும் கையிருப்பில் உண்டு (B-537)

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஓடியோ றெக்கோடிங்கிற்கும், ரி. வி. அன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகலவிதமான ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடவேண்டிய இடம்: NEW VENUS No: 60 Stanley Road, Jaffna.

B/538

முதலாவது

## பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி மீரா சோமாஸ்கந்த சர்மா

யாழ். நாயன்மார்கட்டு "கலை மாமணி" எஸ். சோமாஸ்கந்தா சர்மா சுசீலாதேவி தம்பதியரின் செல்வப் புதல்வி மீரா இன்று 14.4.90 சனிக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை குதூகலமாகக் கொண்டாடுகின்றார். செல்வி மீராவை அப்பா, அம்மா, கோபி அண்ணா, தாத்தா, பாட்டி, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமன்மார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார் ஆகியோர் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்க வென்று மனமார வாழ்த்துகின்றார்கள்.

198, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு
நல்லூர்.

(R/179)

### மோட்டார் சைக்கிள் திருத்துமிடம்

எவ்வகையான மோட்டார் சைக்கிளாயினும் துரித கெதியில் திருத்திக் கொடுக்கப்படும்.

**Motor Cycle Repair Centre**

NO. 3, Eachchamoddai Road Jaffna.

உரிமையாளர்:
S. மகேந்திரராஜா

(B.758)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lochman சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden comet Hyline Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். ( -189)

எமது விரிவுரையாளர்களுக்கும்
மாணவர்களுக்கும்
எமது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3rd CROSS STREET JAFFNA

## சிரமதானம்

(மட்டக்களப்பு)

அன்னை பூபதி நினைவாக பொது வைத்தியசாலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் சாரண மாணவர்கள் இணைந்து அண்மையில் சிரமதானம் மேற்கொண்டனர்.

வார்ட் கட்டிடங்கள் துப்பரவு செய்தல், சுற்றாடல் துப்பரவு, சழிவுகள் அகற்றுதல் மதில் சுவர்களுக்கு மை பூசுதல் போன்றன இடம் பெற்றது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ந ர அமைப்பாளர் தீபன், திரு எஸ். மாஸ்டர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



எங்கள் வாடிக்கையாளர் ளுக்கும்
ஆதரவாளர்களுக்கும், நண்பர்களுக்கும்
யாழ் நகரில்
பொறியியல் வேலைகளுக்குப்
பிரசித்திபெற்று விளங்கும்

## புறோமோட்டர்ஸ் எஞ்ஜினியரிங் கொம்பனி லிமிட்டெட்

நிறுவனத்தாரினதும் அதன் ஊழியர்களினதும்
உள்ளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்



**PROMOTERS ENGINEERING COMPANY LTD.**

844, POINTPEDRO ROAD, NALLUR, JAFFNA.

Project office:
267, VAUXHALL STREET, COLOMBO - 2.

B.363

### யாழ்நகரில் இன்றைய சினிமா

**வின்சர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறைநாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

105 வது நாளாக!!
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

கங்களும் கையிருப்பில் உண்டு (B-537)

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஓடியோ றெக்கோடிங்கிற்கும், ரி. வி. அன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகலவிதமான ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடவேண்டிய இடம்: **NEW VENUS** No: 60 Stanley Road, Jaffna. B/538

சைக்கிளாயினும் துரித கெதியில் திருத்திக் கொடுக்கப்படும்.

## Motor Cycle Repair Centre

NO. 3, Eachchamoddai Road Jaffna.

உரிமையாளர்:

S. மகேந்திரராஜா (B.758)

கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden comet Hyline Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (-189)

நிறுவனத்தாரினதும் அதன் ஊழியர்களினதும் உள்ளங்கனிந்த

புத்தாண்டு வாழ்த்துக்கள்

## PROMOTERS ENGINEERING COMPANY LTD.

844, POINTPEDRO ROAD, NALLUR, JAFFNA.

Project office:
267, VAUXHALL STREET, COLOMBO - 2.

B.363

(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

தரமானதும் சுவையும் நிரம்பிய ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பான வகைகள், மற்றும் மட்டன் றோல், கட்லட், பற்றிஸ், கேக் வகைகள், சுவிற்ஸ், மிக்சர், பீடா முதலியவற்றிக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்

தரத்திற்கு மறுபெயர் "கல்யாணி"

## கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (B-736)

அனைவருக்கும் எமது இதய பூர்வமான தமிழ் சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உள்ளூர் தயாரிப்புக்களான

- குரக்கன் மா
- அரிசி மா
- உழுந்து மா
- கடலை மா
- ஆட்டா மா
- சீயாக்காய்ப் பவுடர்
- கோதுமை அரிசிக் குறுணல்

ஆகியவற்றைப் பாவித்துப் பயனடையுங்கள்

# எம். ஜீ. எம். ஸ்ரோர்ஸ் M. G. M. STORES

777, காங்கேசன்துறை வீதி,
சிவலிங்கப்புளியடி யாழ்ப்பாணம்.

(B-555)

# தென்னாபிரிக்க பேச்சுக்களுக்கு கன்சர்வேடிவ் கட்சி சதி செய்கிறது

## நெல்சன் மண்டேலா குற்றச்சாட்டு

(கேப்டவுண்)

தென் ஆபிரிக்க அரசுக்கும் தென் ஆபிரிக் தேசிய காங்கிரசுக்கும் நடைபெறப் போகும் பேச்சு வார்த்தைகளை உருக்குலைக்க வலது சாரி கன்சர்வேட்டிவ் கட்சியினர் சதி செய்து வருவதாக ஏ. என். சி (தென் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்) துணைத் தலைவர் நெல்சன் மண்டலோ குற்றஞ் சுமத்தி இருக்கிறார்.

இதற்கு முன்பாக நெல்சன் மண்டேலா தனிப்பட்ட ரீதியில் தென் ஆபிரிக்க ஜனாதிபதியை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார். இப்பேச்சுவார்த்தையானது தொடர்ந்து ஏ. என். சி பேச்சு வார்த்தை நடத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் எனக் கூறப்பட்டது. அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இத்தருணத்தில் பேச்சு வார்த்தைக்கு முட்டுக்கட்டையாக வலது சாரி கன்சர்வேட்டிக் கட்சி நடந்து கொள்கிறது என நெல்சன் மண்டேலா அறிவித்துள்ளார்.

ஆயினும் கூடிய விரைவில் அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த ஏ. என். சி இயக்கம் உறுதி பூண்டிருப்பதாக மண்டேலா கூறியுள்ளார். சாம்பியா நாட்டின் தலைநகர் லுசாக்காவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நிர்வாக குழுவுனருடன் பேச்சு வார்த்தை நடத்தி விட்டு திரும்பிய மண்டேலா செய்தியாளர்களிடம் இவ்வாறு கூறினார்.

இரு நிலை பேச்சுவார்த்தைகளை துவக்க ஏ. என். சிக்கு உள்ள ஆர்வத்தை அக்கறையை வெளிக்காட்டும் முகமாகத்தான் தான் இதனை வற்புறுத்திக்கூறுவதாக குறிப்பிட்டார். மேலும் இவர் அதிகம் குற்றஞ் சாட்டியது கன்சவேட்டிக் கட்சியினரைத் தான்.

அடுத்த வாரமளவில் இரு தரப்பினருக்கும் இடையில் முதற் கட்ட பேச்சு வார்த்தை நடைபெறலாம் என்று கூறிய மண்டேலா அதனை திட்டவட்டமாக கூற மறுத்தார்.

## மண்டூரில் அன்னைக்கு அஞ்சலி

(மட்டக்களப்பு)

தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு எவரும் உத்தரவாதம் இல்லை என்பதை தமிழீழ தாயகத்தில் இடம்பெற்ற கடந்தகால சம்பவங்கள் எடுத்து காட்டுகின்றன. இந்நிலையில் இன்று எமது பாதுகாப்பை நாமே உறுதி செய்யும் நிலையில் உள்ளோம்.

மேற்கண்டவாறு மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலய முன்றலில் அன்னை பூபதி நினைவு ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் முடித்து வைத்துப் பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் எஸ். கரிகாலன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் அன்னை பூபதியின் தியாகம் ஓர் சாதாரண தியாகம்அல்ல. சர்வதேச ரீதியில் இடம்பெற்றுள்ள தியாகம் ஆகும். சாத்வீக அன்னை என்ற உயர்ந்த இடத்தை இன்று பெற்றுள்ளார்.

அன்னையின் சாத்வீகத்தை மதிப்பளிக்க இந்தியா தவறிவிட்டது. இதனால் சாத்வீக நாடு என்ற பெருமையையும் இந்தியா இழந்து விட்டது என்றார். (37)

## விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு மிக அவசியம்

### உச்சில் கூட்டத்தில் மாலினி உரை

(கரவெட்டி)

'' 1972 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதாயினும், அக்காலத்தில் நிலவிய பெண்கள் மீதான சமுதாய ஒடுக்குமுறைகள் காரணமாக எம்மால் போராட்டத்தில் இணைய முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது

ஆனால் காலக்கிரமத்தில் சிங்கள அரச படைகள் தனது காட்டுமிராண்டித் தனங்களை பெண்கள் மீதும் பிரயோகித்ததனால் 1983 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நாமும் போராட்டத்தில் இணைய வேண்டிய அத்தியாவசிய தேவை ஏற்பட்டது, அதற்கியைபாகவே நம் இன்று மன வலிமையுடனும், ஆட்பலத்துடனும் போராடி வருகின்றோம் ''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி யாழ். மாவட்டப் பொறுப்பாளர் செல்வி மாலினி உச்சில் புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற அன்னை பூபதி ஞாபகார்த்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

இவ்வஞ்சலிக் கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி கட்சி அமைப்பாளர் திரு. அரசண்ணா தலைமை வகித்தார்.

செல்வி மாலினி தொடர்ந்து பேசுகையில்; ''இன்று எமது மண்ணில் வாழுகின்ற சனத்தொகைப் பருமனில் 60% மானோர் பெண்களாகவே காணப்படுகின்றனர் இதனால் எமது விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பும் மிக அவசியமாகின்

## மூதூர் பகுதி மாணவர்களுக்கு 'சோலற்' விரிவுரைகள்

(மூதூர்)

கடந்த சில வருடங்களாக மாணவர்களின் கல்வி இப்பிரதேசத்தில் பெரிதும் பாதிப்புற்றிருந்தது அனைவரும் அறிந்ததே எதிர்வரும் க. பொ.த. சாதாரணதரப் பரீட்சையை முன்னிட்டு மாணவர்களின் நலன்கருதி விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு'' விரிவுரைகளை நடாத்தி வந்தது.

இவ்விரிவுரைகள் யாவும் இப்பகுதியிலுள்ளபாடசாலைகளில் கற்பிக்கும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களால் நிகழ்த்தப்பட்டன. கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, தமிழ், ஆங்கிலம், ஆகிய பாடங்கள் இவ்விரிவுரைகளில் முக்கிய இடத்தைப்பிடித்தன.

சேனையூர் மகாவித்தியாலயம், கிளிவெட்டி மகாவித்தியாலயம் அந்நகார் மகளிர்வித்தியாலயம் ஆகியவற்றிலேயே இக்கருத்தரங்கு நடைபெற்றன. இவ்வாறான ஆக்கபூர்வமான முயற்சிக்கு இப்பகுதி மாணவர்களிடமிருந்து பெருமளவு வரவேற்பு கிடைத்திருக்கிறது.

எதிர்வரும் ஆகஸ்ட் உயர்தரப் பரீட்சைகளை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்களுக்கான கருத்தரங்குகளையும் இவர்களால் நடாத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## அமைச்சர் லலித் உத்தரவு

## முதலாம் வகுப்பு மாணவரை அனுமதிக்க புதிய விதிகள்

(கொழும்பு)

முதலாம் வருட மாணவர்களைப் பாடசாலைகளில் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் மூன்றாம் வாரத்திலிருந்து அனுப்பி வைக்குமாறு கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

முறைகேடுகள் இடம்பெற்றால் அது குறித்துச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

முதலாம் வருட மாணவர்களைச் சேர்ப்பதற்குரிய முதலாவது நேர்முகப் பரீட்சை பகிரங்கமாகவே நடாத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## இ.போ.ச. ஊழியர்கள் ஓய்வு பெறுகிறார்கள்

(அட்டாளைச்சேனை)

இலங்கைப் போக்குவரத்து அமைச்சின் சுற்றுநிருபத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைய அக்கரைப்பற்றுச் சாலையிலிருந்து ஆறு ஊழியர்கள் ஓய்வு பெறுகின்றனர்.

இவர்களில் நான்கு சாரதிகள், ஒரு நடத்துனர், ஒரு சாலைப் பரிசோதகரும் அடங்வார். என்பது குறிப்பிடத்தக்கது. (46)

## பூநகரியில் அறுவடை

(ஈச்சமோட்டை)

பூநகரியில் அறுவடை வெட்டி முற்றுப் பெற்றும் சூடு அடிக்காமல் ஏராளமான சூடுகள் போர்களாக அடுக்கப்பட்டுள்ளது.

போதிய கூலி ஆட்கள் இல்லாமையே சூடு அடிப்பது தாமதம் ஏற்பட்டுள்ளது என்று கமக்காரர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

இதனால் வெளியிடங்களில் இருந்து பல கூலியாட்கள் வந்து சூடு அடிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

## கடை எரிந்தது

(முல்லைத்தீவு)

ஒட்டு சுட்டான் புளியங்குளத்தில் கடையொன்று முற்றாக எரிந்து சேதமானது.

ப.யோகேந்திரன் என்பவரது இக்கடையில் இருந்த எரிபொருளில் தீப்பிடித்ததாலேயே இச்சம்பலம் இடம் பெற்றது.

## கோமாரி நோய்க்கு தடுப்பூசி

(ஈச்சமோட்டை)

கால்நடை வைத்தியர்களின் உதவியுடன் 65 கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி நேற்று போடப்பட்டுள்ளது. கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய இளைஞர்கள் எடுத்த முயற்சியினால் இங்கு இந்நோய்க்கான தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. (43)

## பருத்தித்துறையில்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரில் அன்னை பூபதி ஞாபகார்த்தமாக சுழற்சி முறை உண்ணாவிரதம் நடைபெற்று வருகின்றது.

பருத்தித்துறை மருதடி கந்தசுவாமி ஆலய அருகாமையில் நடைபெற்று வரும இச்சுழற்சி முறை உண்ணா விரதத்தில் பருத்தித்துறைத் தொகுதியைச் சேர்ந்த மக்கள்


அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

அன்னை பூபதிக்கு எமது அஞ்சலி

**மயூதரன் அன் கோ.**

உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வாங்குபவர்கள் - விற்பவர்கள்

இல. 41, கே. கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 24249

B. 762

ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**நியூ ராதிகா ஜுவல்லறி**

189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

B/767

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

வர் எஸ். கரிகாலன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் அன்னை பூபதியின் தியாகம் ஓர் சாதாரண தியாகம்அல்ல. சர்வதேச ரீதியில் இடம்பெற்றுள்ள தியாகம் ஆகும். சாத்

மாணவர்களின் கல்வி இப்பிரதேசத்தில் பெரிதும் பாதிப்புற்றிருந்தது அனைவரும் அறிந்ததே எதிர்வரும் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையை முன்னிட்டு மாணவர்களின் நலன்கருதி விடுதலைப்

இவ்விரிவுரைகள் யாவும் இப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களால் நிகழ்த்தப்பட்டன. கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, தமிழ், ஆங்கிலம், ஆகிய பாடங்கள் இவ்விரிவுரைகளில் முக்கிய இடத்தைப்பிடித்தன.

சேனையூர் மகாவித்தியாலயம், கிளிவெட்டி மகாவித்தியாலயம் அந்நகார் மகளிர்வித்தியாலயம் ஆகியவற்றிலேயே இக்கருத்தரங்கு நடைபெற்றன. இவ்வாறான ஆக்கபூர்வமான முயற்சிக்கு இப்பகுதி மாணவர்களிடமிருந்து பெருமளவு வரவேற்பு கிடைத்திருக்கிறது.

எதிர்வரும் ஆகஸ்ட் உயர்தரப் பரீட்சைகளை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்களுக்கான கருத்தரங்குகளையும் இவர்களால் நடாத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## அமைச்சர் லலித் உத்தரவு

# முதலாம் வகுப்பு மாணவரை அனுமதிக்க புதிய விதிகள்

(கொழும்பு)

முதலாம் வருட மாணவர்களைப் பாடசாலைகளில் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் மூன்றாம் வாரத்திலிருந்து அனுப்பி வைக்குமாறு கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

ஜூலை மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக முதலாவது நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

செப்டம்பர் 30ஆம் திகதிக்குள் தெரிவுகள் அனைத்தும் பூர்த்தியாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குள் மாணவர்களைச் சேர்ப்பதில் ஏதாவது முறைகேடுகள் இடம்பெற்றால் அது குறித்துச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

முதலாம் வருட மாணவர்களைச் சேர்ப்பதற்குரிய முதலாவது நேர்முகப் பரீட்சை பகிரங்கமாகவே நடாத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# சேனையூர், சம்பூர்ப் பகுதிகளில் பயிர்ச்செய்கை தீவிரம்

(மூதூர்)

கடந்த ஏழு வருடங்களாக இப்பகுதிகளில் விளைந்த அனர்த்தங்களினால் தடைப்பட்டிருந்த பயிர்ச்செய்கையும் நெற்செய்கையும் இந்திய அமைதிப்படையினரின் வெளியேற்றத்துக்குப் பின்பு தீவிரமடைந்திருக்கிறது.

விவசாய முயற்சிகளுக்குப் பேர் போன இப்பிரதேச மக்கள் கடந்த பல வருடங்களாக பயிர்ச்செய்கையை மறந்துபோன நிலையில் காணப்பட்டார்கள். இந்த வருடம் மிளகாய் இராசவள்ளிக்கிழங்கு, கோவா போன்ற பயிர்ச்செய்கைகளிலும் வீட்டுத் தோட்டங்களிலும் மக்கள் பெரும் முனைப்புடன் ஈடுபடுவதைக் காணக்கூடியதாய் இருக்கின்றது.

இந்திய அமைதிப்படையினரின் வெளியேற்றத்துக்குப் பிறகு இப்பகுதிப் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு அதிகரித்திருக்கிறது. மக்கள் பயமின்றி வீதிகளில் இரவு வேளைகளிலும் நடமாடுகிறார்கள்.

## பருத்தித்துறையில்

# பிறப்பு, இறப்பு, திருமண விண்ணப்பம் ஏற்பது நிறுத்தம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மேலதிக பெரும் பகுதிப்பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாகப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வது நிறுத்தப்பட்டுள்ளது.

இவ் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு, விவாகப் பத்திரங்களுக்கான படிவங்கள் இல்லாமையினாலேயே இவைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வது நிறுத்தப்பட்டுள்ளதாக பதிவாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பருத்தித்துறை மேலதிக பெரும் பதிவாளர் அலுவலகத்திற்கு வேண்டிய பத்திரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பாவனையாளர் சங்கம் பதிவாளர் நாயகத்திற்கு அவசர தந்தியை அனுப்பியிருந்தது. பருத்தித்துறை மேலதிக பெரும் பகுதிப் பதிவாளர் அலுவலகமும் தந்தியும், கடிதங்களும் அனுப்பிவைத்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பருத்தித்துறை மேலதிக பெரும் பகுதிப் பதிவாளர் அலுவலகத்தில் இப்பத்திரங்கள் இல்லாமையினால் வடமராட்சிப் பகுதி மக்கள் பலத்த கஷ்டங்களை அனுபவித்துவருகின்றனர். (25)

## மென்பந்து கிரிக்கட் போட்டி

# யங் ஸ்ரார் விளை. கழகம் வெற்றி பெற்றுள்ளது

(யாழ் விளையாட்டு நிருபர்)

அரியாலை சனசமூக நிலையத்தின்71ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு அரியாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் ஈச்சமோட்டை யங் ஸ்ரார்'' விளையாட்டுக்கழகம் அணி கொழும்புத்துறை ஜெட் லைனஸ் விளையாட்டுக் கழகத்தை 42 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஈச்சமோட்டை அணி தனது முழு விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ். தர்சன் 28 ஓட்டங்களையும், துரைசிங்கம் ரொணி 14 ஓட்டங்களையும், ஏ. ராசேந்திரம் (அணித்தலைவர்) 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஜெற்லையினர்ஸ் தனது துடுப்பாட்டத்தில் சகல விக்கட்டுகளையும் மிகவும் கெதியில் இழந்து 51 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். இதில் நிகல் மாத்திரம் குறிப்பிடத்தக்க அளவில் இரண்டு சிக்சர் உட்பட 26 ஓட்டங்களைப் பெற்றார். (42)

றோம்''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி யாழ். மாவட்டப் பொறுப்பாளர் செல்வி மாலினி உச்சில் புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற அன்னை பூபதி ஞாபகார்த்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

இவ்வஞ்சலிக் கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி கட்சி அமைப்பாளர் திரு. அரசண்ணா தலைமை வகித்தார்.

செல்வி மாலினி தொடர்ந்து பேசுகையில்; ''இன்று எமது மண்ணில் வாழுகின்ற சனத்தொகைப் பருமனில் 60% மானோர் பெண்களாகவே காணப்படுகின்றனர் இதனால் எமது விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பும் மிக அவசியமாகின்றது. எனவே ஒவ்வொரு பெண்ணும் பெண்ணினத்திற்கே பெருமை தேடித்தந்த அன்னை பூபதி அம்மையைப் போன்று இலட்சியப் பற்றுடனும், மன உறுதியுடனும் போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும்'' என்றார்.

மக்கள் முன்னணி செயற்குழு உறுப்பினர் திரு. செங்கதிர் பேசுகையில்; ''இந்தியா தமிழீழத்தில் ஒரு பலம் பொருந்திய விடுதலையமைப்பு உருவாவதையோ, அன்றி வளர்ச்சியடைவதையோ என்றும் விரும்பவில்லை. ஆனால் இவர்களின் விருப்பத்திற்கு மாறாக நாம் பலம்பொருந்திய நிலையில் வளர்ச்சி கண்டோம்'' என்றார்.

மக்கள் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. குணம், வடமராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. செல்வம், எழுத்தாளர் திரு. மோகன், ஆசிரியர் திரு. எஸ். கருணாநிதி ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். (18)

கால்நடை வைத்தியர்களின் உதவியுடன் 65 கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி நேற்று போடப்பட்டுள்ளது. கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய இளைஞர்கள் எடுத்த முயற்சியினால் இங்கு இந்நோய்க்கான தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. (43)

## பருத்தித்துறையில்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரில் அன்னை பூபதி ஞாபகார்த்தமாக சுழற்சி முறை உண்ணாவிரதம் நடைபெற்று வருகின்றது.

பருத்தித்துறை மருதடி கந்தசுவாமி ஆலய அருகாமையில் நடைபெற்று வரும இச்சுழற்சி முறை உண்ணாவிரதத்தில் பருத்தித்துறைத் தொகுதியைச் சேர்ந்த மக்கள் பங்கு பற்றி வருகின்றனர்.

இச் சுழற்சி முறை உண்ணாவிரதம் 19 ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

இதே போல இப்பகுதிகளில் அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன (25)

# புதிய தபாலகம் திறப்பு விழா

(அட்டாளைச் சேனை)

ஒலுவில் கிராமத்தில் 1989 ஆம் ஆண்டின் மத்திய அரசின் வரவுசெலவு நிதித்திட்டத்தில் புதிதாக தபால் நிலையம் ஒன்றினை சுமார் 75,000 செலவில் பள்ளிவாசல்வளவினில் கட்டிமுடிக்கப்பட்டது.

இதை அண்மையில் அட்டாளைச்சேனைத் தபால் அதிபர் திரு. எஸ். சுரேந்திரன் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். இவர் தபாற் கந்தோரில் வேலைபுரியும் ஊழியர்கள் பொது மக்களின் பங்களிப்பைப் பற்றி மிகமுக்கியமாகக் கூறி வைத்தார்.

இத் தபாலகம் முன்னர் தனியார் கட்டிடத்தில் இயங்கி வந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (46)

# மூதூர்ப் பிரதேசத்தில் அன்னை பூபதிக்கு அஞ்சலி

மூதூர்ப் பிரதேசத்தில் உள்ள கிராமங்கள் தோறும் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தப்படுகிறது.

சம்பூர், சேனையூர், கட்டைபறிச்சான், கூனித்தீவு, கடற்கரைச்சேனை, கிளிவெட்டி, போன்ற தமிழ்க் கிராமங்களில் மட்டுமல்லாது பெரிய பாலம், தோப்பூர் போன்ற முஸ்லிம் கிராமங்களில் உள்ள மக்களும் ஆர்வத்துடன் திரண்டு அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.

வீடுகள் தோறும் வாழைகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, அன்னை பூபதியின் உருவப்படத்தை வைத்து அதற்கு மலர் மாலைகளைச் சூட்டியும் மக்கள் தங்கள் அஞ்சலிகளைச் செலுத்துகின்றனர்.

அடையாள உண்ணாவிரதம் பொதுக்கூட்டம் போன்றனவும் நடைபெறும் என எதிர் பார்க்கப்படுகிறது. (28)


**நியூ ராதிகா ஜுவல்லறி**

189, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

B/767

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது புத்தாண்டு
வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**காந்தா மோட்டோர்ஸ்**

54, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24240

B.765

பொங்கும் மங்களம் எங்கும் தங்கிட
பொலிவாய் மலரும் இப் புத்தாண்டில்
மனங் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை
உங்கள் அனைவருக்கும்
தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

வியாபாரிகளே! விவசாயிகளே!!

உங்களுக்குத் தேவையான

தராசு வகைகளும்
நீர் இறைக்கும் யந்திரங்களும்
ஜெனரேட்டர்களும் மற்றும்
விவசாய கிருமி நாசினிகளும்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
யாழ்நகரில் நாடவேண்டிய ஸ்தாபனம்

**V. வடிவேல்**

லங்கெம் பிராந்திய விற்பனை
நிலையம்
219, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23454

PEOPLE'S BANK
மக்கள் வங்கி

# மக்கள் வங்கியின்
# புதுவருட வாழ்த்துக்கள்

## புத்தாண்டைக் கொண்டாடும்
## எமது வாடிக்கையாளர்களுக்கும்
## மற்றும்

புத்தாண்டைக் கொண்டாடும்

எமது வாடிக்கையாளர்களுக்கும்

மற்றும்

ஆதரவாளர்களுக்கும்

# மக்கள் வங்கி

## தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது

**மக்கள் வங்கியே நம் தோழன்**

மக்கள் வங்கி

பிராந்தியத் தலைமையகம்

யாழ்ப்பாணம்.

(B-742)

புதுவருட வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக!

அழகிய புடவைகளை மலிவு விலையிலும்
அழகிய சேட்டிங், சூட்டிங் வகைகளை
நிதான விலையிலும் பெற்றிட

சண்முகம் ரெக்ஸ்
37, நியூ மார்க்கற்,
யாழ்ப்பாணம்.
(B.472)

# அம்பாறை பிள்ளையார் ஆலய வளவைச் சுற்றி மதில் அமையும்

(அம்பாறை)

பெருன்பான்மைச் சமூகத்தினர் கூடுதலாக வாழும் அம்பாறையில்அமைந்துள்ள பழம் பெருமை மிக்க ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தைச் சுற்றி மதில் சுவர் அமைக்க ஆலயத்தின் தற்போதைய நிருவாகம் முன்வந்துள்ளது.

சுமார் எழுபதாயிரம் ரூபா செலவில் இந்த மதில் கட்டப்படவிருக்கிறது. இதில் பெரும் பகுதியை அம்பாறையிலுள்ள அரச திணைக்கள கூட்டுத்தாபன தமிழ் உத்தியோகத்தர்கள் தமது நிதிஉதவியுடன் அன்பளிப்பாகச் செய்து கொடுக்க முன்வந்துள்ளனர்.

அடிக்கடி இனக்கலவரங்களினால் பாதிக்கப்பட்டு வரும் இவ்வாலயத்திற்கு அண்மையில் புதிய அர்ச்சகர் ஒருவரும் முகாமையாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையின் இணைச் செயலாளர்களில் ஒருவரான திரு. ரவி தெரிவித்தார்.

(48)

## கௌரவிக்கப்படுவர்

நயினை அருள்மிகு நாகபூசணி அம்பாள் ஆலய பிரதம மகேற்சவ குருமணி சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள் அவர்களுக்கு 'சிவகாம கலாநிதி' பட்டமும், திருமதி மாணிக்கம் யோகம்மா அவர்களுக்கு 'அன்னை அமுதசுரபி' பட்டமும் வழங்கப்படவுள்ளது.

அன்பளிப்பு!

நாகூர் ரெக்ஸ்
154,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்
(B/473)

# தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரியில் கிளை

(சாவகச்சேரி)

தேசிய சேமிப்பு வங்கியின் எழுபத்தி மூன்றாவது கிளைத் திறப்புவிழா சாவகச்சேரியில் கடந்தவியாழக்கிழமை காலை வைபவ ரீதியாக நடைபெற்றது,

உதவிப் பொது முகாமையாளர் திரு. உருத்திரா நவரட்ணராஜா இதை சம்பிரதாயபூர்வமாக, சமயாசாரப்படி மங்கள விளக்கேற்றித் திறந்து வைத்தார்.

சாவகச்சேரியில் இலங்கை வங்கிக் கிளைக்கு அருகாமையில், கண்டி வீதியில் அமைந்துள்ள இத்தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் சாதாரண சேமிப்புக் கணக்குகள், நிரந்தர வைப்புக் கணக்குகள், ஓய்வூதியக் கணக்குகள், நன்கொடைத் திட்டங்கள் போன்ற பல பிரிவுகள் உண்டு.

இதன் முகாமையாளராக திரு. எம். சிவானந்தா, உப முகாமையாளராக திரு. கே. இராஜதுரை ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் திரு. ரீ. நவர்த்தினராஜா முதல் வைப்புக் கணக்கு ஒன்றை வைத்து, அப்பிரிவை ஆரம்பித்து வைத்தார்.

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளைக்கு பாஸ் புத்தகமும், நிரந்தர வைப்புக் கணக்குப் பற்றுச்சீட்டும் வழங்கப்பட்டது.

## தும்பளை வீதியின் அவல நிலை

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலுள்ள தும்பளை, வராத்துப்பளை வீதி நீண்ட காலமாகக் கவனிப்பாரற்றுப் பெருங் குன்று குழிகளுடன் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது.

இவ் வீதியால் பிரயாணம் செய்யமுடியாத அவல நிலை தோன்றியுள்ளது அடிக்கடி பயங்கர விபத்துக்களும் இடம் பெறுகின்றன.

இதைத்திருத்தி புனரமைத்துத் தரும்படி வராத்துப்பளை சனசமூக நிலையம் வீதிகள் அபிவிருத்தித் திணைக்களத்தைக் கோரியுள்ளது.

(25)

## மேற்கு ஜேர்மனி பயணம்

(கல்லாறு)

பெரியகல்லாற்றைச்சேர்ந்த நில அளவையாளர் திரு. பொ. தருமேந்திரன் புலமைப்பரிசில் பெற்று, மூன்று மாதகாலப் பயிற்சிக்காக மேற்கு ஜேர்மன் செல்லவுள்ளார். மேற்கு ஜேர்மனியின் ஒப். ஆர். சி. புலமைப் பரிசில் பெற்று இங்கிருந்து பயணமானார். இருபத்திநான்கு பேரில் கிழக்கில் இருந்து செல்லும் ஒரேயொரு தமிழ் நிலஅளவையாளர் திரு. பொ. தருமேந்திரன் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் அரச நிலஅளவையாளராக கடந்த பதினெட்டு வருடங்களாகச் சேவையாற்றி வருகின்றார். முன்னர் புலமைப் பரிசில் பெற்று இந்தியாவிற்கும் சென்றுவந்த இவர் வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவராவார்.

(45)

அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்
வெளிநாட்டில் உங்கள் உறவினர்களுக்கு
அவசரமாக விரைவாக பாதுகாப்பாக
கடிதங்கள் பார்சல்கள் தஸ்தா வேஜுக்கள்
ஆகியவற்றை அனுப்ப உடன்
தொடர்புகொள்ளுங்கள்

DHL. INTERNATIONAL LTD.
C/O Cosmos Marketting Services Ltd.
337, Kasturiar Road,
Jaffna.
(B.744)

புதுவருட வாழ்த்துக்கள் அனைவருக்கும்
உரித்தாகுக

பட்டர் கேக் ❋ ரிச் கேக்
பிறந்தநாள் கேக் ❋ பாண் வகைகள்
பனிஸ் ❋ சுவிட்ஸ் ❋ கட்லற்
மட்டன் றோல் ❋ இடியப்பம்
நூடில்ஸ் ❋ கோழிப் புரியாணி

ஆகியவற்றை சுகாதார முறையில் நீங்கள்
உண்ணவும், பெற்றிடவும்
சிறந்த ஸ்தாபனம்

ஹொட்டல் சுபாஸ்
176, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(B.471)

அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு
வாழ்த்துக்கள் உரித்தாகுக!

மின்னிணைப்பு ஒப்பந்தக்காரரும்
விநியோகஸ்தரும்

கரசன் எலக்றிக்கல்ஸ்

எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக!

பிடவைகள், தையல் உபகரணங்கள், அங்கலின்
தயாரிப்புகள் பிளாஸ்டிக், பொலித்தீன்,
குறோசறி, சொப்பிங் பாக் வகைகள் மொத்த
சில்லறை விற்பனையாளர்கள்.

அங்கலின்
ரெக்ஸ்ரைல்

வாடிக்கையாளர்களுக்கு எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக

தரமான 22 கரட்
தங்க நகைகளுக்கு

சிறந்த ஸ்தாபனம்

ஹொட்டல் சுபாஸ்
176, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(B.471)

337, Kasturiar Road,
Jaffna.
(B.744)

எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக!

பிடவைகள், தையல் உபகரணங்கள், அங்கலின் தயாரிப்புக்கள் பிளாஸ்டிக், பொலித்தீன், குறோசறி, சொப்பிங் பாக் வகைகள் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்.

அங்கலின்
ரெக்ஸ்ரைல்
43, 48, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி;- 22684
(B/456)

வாடிக்கையாளர்களுக்கு எமது
புத்தாண்டு வர்ழ்த்துக்கள் உரித்தாகுக

தரமான 22 கரட்
தங்க நகைகளுக்கு
நியூ செந்தில்
ஆண்டவன் நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
B.421

அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு
வாழ்த்துக்கள் உரித்தாகுக!

மின்னிணைப்பு ஒப்பந்தக்காரரும்
விநியோகஸ்தரும்

கரசன் எலக்றிக்கல்ஸ்
4, ஸ்ரான்லி வீதி,
ஜே. எம். சி. பில்டிங்
(விடோ சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம்.
(B.753)

ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
புத்தாண்டு நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

யாழ் நகரில்
அன்றும்! இன்றும்!! என்றும்!!!
சிறந்த முறையில்
படம் பிடிப்பவர்கள்

பாரத் ஸ்ருடியோ
82/1. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(B-349)

அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

திருமணம் மற்றும் முகூர்த்த
பட்டுப் புடைவைகள், சேட்டிங், சூட்டிங்
என்பவற்றை
உங்கள் எண்ணம்போல் எண்ணற்ற ரகங்களில்
தெரிவு செய்திட
இன்றே விஜயம் செய்யுங்கள்

இளவரசி ரெக்ஸ்ரைல்
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(B.474)

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு
எமது வாடிக்கையாளர்களுக்கு
அன்பு வாழ்த்துக்கள் உரித்தாகுக!

சுத்தமான 22கரட் தங்கத்தில்
குறித்த தவணையில் நகைகள்
செய்து கொடுக்கப்படும்.


புனிதா
ஜுவலறி மார்ட்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,
(B/347)

அனைவருக்கும் தமிழ் - சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

வாலாம்பிகா ரேடர்ஸ்
2A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22708
(B-757)

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரியாகக் கொடுப்பவர்கள்



# எஸ். எம். பெர்ணாண்டோ

580, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(B.751)

---

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு பிரசித்திபெற்ற ஸ்தாபனம்

# மஹாலக்ஷ்மி ஜுவல்லரி மார்ட்

# MAHALUXMI JEWELLERY MART

213A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23733

213 A, KASTHURIAR ROAD, JAFFNA.

(B.738)

---

அனைவருக்கும்எமது புதுவருட வாழ்த்துக்கள்

## அதிர்ஷ்ட லாபச் சீட்டு

## ரூபா 10/-

மேற்குறிப்பிட்ட சீட்டுக்குரிய ரிக்கட்டுகள் யாழ்நகரில் அமோகமாக விற்பனையாகிக்கொண்டிருக்கிறது.

1ஆம் பரிசு அழகிய ஒக்ஸ்ட்போட் மோட்டார் வண்டி
2ஆம் பரிசு கொண்டா லங்கர் (97) மோட்டார் சைக்கிள்
3ஆம் பரிசு புதிய சாலி மோட்டார் சைக்கிள்
மேலும் 10 ஆறுதல் பரிசுகள்

சீட்டிழுப்பு 9. 5. 1990 இல் நடைபெறும்' இன்றே ரிக்கற்றுகளை வேண்டி உங்கள் அதிர்ஷ்டத்தை பரிசோதியுங்கள்

ஏக விநியோகஸ்தர்கள்

## EUROPE CHINA HOTEL

**29, 2nd Cross Street,** ***JAFFNA***

(B/760)

---

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

அனைவருக்கும் உரித்தாகுக!

அழகிய அச்சுவேலைகளுக்கு

யாழ்நகரில் தலைசிறந்தவர்கள்

## ஸ்ரீ லங்கா அச்சகம்

23 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 24175, 24212

(B-455)

---

பிறக்கும் புத்தாண்டில்

எமது இளம் சந்ததியினருக்கும்

வாடிக்கையாளருக்கும்

நண்பர்கள், அன்பர்கள்

அனைவருக்கும்

## புத்தாண்டு வாழ்த்துகளை

தெரிவித்துக் கொள்கின்றோம்

## விநாயகர் ஸ்ரோர்ஸ்

பிரபல மொத்த சில்லறை வியாபாரம்

166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,

(R-718)

---

அனைவருக்கும் எமது உளம் கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

---

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது குதூகல

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

---

ஞானவயிரவர் சனசமூக நிலையம்

முடமாவடி திருநெல்வேலி கிழக்கு.

## புத்தாண்டு விழா

மேலும் 10 ஆறுதல் பரிசுகள்

சீட்டிழுப்பு 9. 5. 1990 இல் நடைபெறும். இன்றே ரிக்கற்றுகளை வேண்டி உங்கள் அதிர்ஷ்டத்தை பரிசோதியுங்கள்

ஏக விநியோகஸ்தர்கள்

EUROPE CHINA HOTEL

29, 2nd Cross Street. JAFFNA

(B/760)

ஸ்ரீ லங்கா அச்சகம்

23 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 24175, 24212

(B-455)

விநாயகர் ஸ்ரோர்ஸ்

பிரபல மொத்த சில்லறை வியாபாரம்

166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,

(R-718)

அனைவருக்கும் எமது உளம் கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

GOPAL AND TRADING CO

(TRANSPORT AGENT)

149, Dam Street Colombo-12
T. Phone: 434419

யாழ்ப்பாண கிளை அலுவலகம்

GOPAL AGENCY

662.K.K.S.Road. Jaffna

(B-739)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது குதூகல

புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஆங்கில மருந்து வகைகள் ரொனிக் ஆகியன குளிரூட்டப்பட்ட அறைக்குள் பாதுகாப்பாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள அழைக்கின்றோம்.

கவிதா பார்மசி

(குளிரூட்டப்பட்டது)

959, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெருச் சந்தி
யாழ்ப்பாணம்

(B.749)

ஞானவயிரவர் சனசமூக நிலையம்
முடமாவடி திருநெல்வேலி கிழக்கு.

புத்தாண்டு விழா

திகதி 15-4-90 ஞாயிற்றுக்கிழமை
காலம்: காலை 6-00 மணி முதல்
இட: முடமாவடி மைதானம்
நிகழ்ச்சிகள்:

- 20 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி
- 10 மைல் மரதன் ஓட்டம்
- 05 மைல் மரதன் ஓட்டம் (உள்ளூர்)

மாலை நிகழ்ச்சி: கரபந்தாட்டப்போட்டி

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 15-4-90 காலை 6-00 மணிக்கு முன் முடமாவடி மைதானத்தில் சமூகம் தருமாறு கோரப்படுகின்றனர்

விளம்பரம் அன்பளிப்பு
எம்.டி. சோப் அச்சுவேலி

R 174

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

எல்லா செரமிக் வகைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் S LON பைப் வகைகள், பொருத்திகள்,
சுவர் மாபிள் கல் வகைகளுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்

கோல்டன் செரமிக்

இல. 2D, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 24808

(B-737)

மானிப்பாய் மருதடி விநாயகர் அருளால் அனைவருக்கும்

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

வே. சி. கணபதிப்பிள்ளை சகோதரர் மானிப்பாய்

(B-746)

ஈழநாதம்

# 'சார்க்' கொழும்பில் கூடாவிட்டால் மாலி மகாநாட்டை கொழும்பு பகிஷ்கரிக்கும்

(கொழும்பு)
கொழும்பில் சார்க் மகாநாடு கூடாவிடில் மாலைதீவில் கூடவிருக்கும் சார்க் மகாநாட்டில் ஶ்ரீலங்கா கலந்துகொள்ளாது என கபினற் பேச்சாளரும், தோட்டத் தொழிற்துறை அமைச்சருமான ரஞ்சன் விஜெரெட்னா தெரிவித்தார்.

இதேவேளை ஏழு நாடுகளைக் கொண்ட சார்க் அமைப்பின் தலைமைப் பதவியை வகிக்கும் பாகிஸ்தானிடமிருந்து சார்க் மகாநாடு தொடர்பாகத் தமக்கு அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை எனவும் ரஞ்சன் தெரிவித்தார்.

சார்க் மகாநாட்டை கொழும்பில் நடத்தச் சொன்னால் எம்மால் நடத்த முடியும். ஆனால் ஒழுங்குகளைக் கவனிப்பதற்கு மூன்று வார அவகாசம் வேண்டும் - இவ்வாறு ரஞ்சன் தெரிவித்தார்.

## மரணமான ஆசிரியர்களுக்கு நஷ்டஈடு வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
அண்மைக்கால வன்செயல்களால் மரணமான ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளரைக் கேட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த மாகாண கல்வியமைச்சின் செயலாளர் திரு இ. ஜே. சற்குணராஜாவிடம் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழு நேரடியாக இக்கோரிக்கையை விடுத்தது.

கடந்தகால மாகாணசபை மத்திய அரசு வழங்கிய அதிகாரப் பரவலாக்கலை முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்றும் தற்போதைய மாகாண கல்வியமைச்சு இந்த அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தவேண்டும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

தமிழ்மொழி அமுலாக்கல் தீவிரப்படுத்தப்பட வேண்டும். தற்போதைய கல்விப்பணிப்பாளர்களுக்கு பூரண அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்றும் கூறப்பட்டது.

மேலும், மாவட்ட மாகாண மட்டத்தில் இடமாற்றச் சபைகள் அமைக்க வேண்டும்.

பாதுகாப்பின்மைக்கான ஊக்குவிப்பு பணம் சகலருக்கும் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்றும் எடுத்துக் கூறப்பட்டது.

ஜூலை மாதம் முதல் வழங்கப்படவிருந்த பாதுகாப்பின்மைக்கான ஊக்குவிப்பு பணத்தை மே மாதம் முதல் உடனடியாக பகுதி பகுதியாக வழங்குவதற்கு செயலாளர் உடன்பட்டார்.

இச்சந்திப்பின்போது யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கமும் உடனிருந்தார்.

## ஊழியருக்கு மேலதிக இலாபம்

(கொழும்பு)
மக்கள் மயமாக்கப்பட்ட தொழில்நிறுவனங்களில் பணிபுரியும் அரசாங்க ஊழியர்களுக்கு மேலதிக இலாபம் வழங்கப்படவுள்ளது.

இதன்படி இந்த நிறுவனங்களின் பத்து சதவீதமான பங்குகள் அந்தந்த நிறுவனத்தில் உள்ள ஊழியர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

சேவை நன்கொடைக் கொடுப்பனவு, சேமலாப நிதிக் கொடுப்பனவு சேவை நீக்கத்தின்போது வழங்கப்படும் நட்ட ஈடு என்பனவற்றுக்கு மேலாகவே இந்த இலவச பங்குகள் கிடைக்கவுள்ளன.

ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் இதனை வழங்க அமைச்சரவை இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்தப் பங்குகளை வழங்குவதால் ஏற்படும் செலவையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும்.

## யாழ். மத்திய கல்லூரி
## விளையாட்டுத் திடலை புனரமைக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு திடலை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகிறது.

அடுத்த செப்ரெம்பர் மாதமளவில் இப் புனருந்தாரண வேலைகள் முடிவடைந்து விடும் என வட கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை செயலாளர் ஈ. ஜெ. சற்குணராஜா தெரிவித்துள்ளார்.

இரண்டு லட்ச ரூபா செலவில் நடைபெற இருக்கும் இப் புனருந்தாரண வேலைகளைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் நிறுவனங்கள் சிலவற்றின் ஒத்துளைப்புடன் ஏழு நாள் கிறிக்கெட் பயிற்சி முகாம் ஒன்றும் நடைபெற உள்ளதாக அவர் தெரிவித்தார். (லோ)

## அன்பளிப்பு பேரீந்து விற்றது பிடிபட்டது

(மட்டக்களப்பு)
சவூதி மன்னர் அன்பளிப்புச் செய்த பேரீச்சம்பழம் தனியார் வர்த்தக நிலையமொன்றில் விற்பனை செய்யப்பட்டதை தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டுபிடித்தனர்.

இச்சம்பவம் அண்மையில் நிந்தாவூர் பகுதியில் நடைபெற்றது. சவூதி மன்னர் வழங்கிய இப் பேரீச்சம்பழம் நோன்பு நோற்பவர்களுக்காக வர்த்தக வியாபார அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். எம் மன்சூரினால் பள்ளிவாசல்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டது.

66 அரைக் கிலோ பேரீச்சம் பழம் தனியார் நிறுவனமொன்றில் கிலோ அறுபது ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த புகார்களையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இதனைக் கைப்பற்றினர்.

தைக்கா பள்ளிவாசல்ஒன்றினால் விற்பனை செய்யப்பட்டது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் விசாரணை செய்யப்பட்டு வருகிறார்கள். கைப்பற்றப்பட்ட பேரீச்சம் பழம் நோன்பு நோற்கும் விதவைகளுக்கு புலிகளால் பகிர்ந்தளிக்கப்பட்டது. (37)

## சுதேசிய அன்னை பூபதி வெற்றிக் கேடயம்

(அரியாலை)
இன்று பிரமோதூத வருடப் பிறப்பன்று அரியாலையூர் மக்களால் கொண்டாடப்படும் 71 வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில், அரியாலையைச் சேர்ந்த மறைந்த வீர வேங்கைகளில் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளதோடு, போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியோர்களுக்கு அன்னை பூபதி ஞாபகார்த்தமாக வெற்றிக் கேடயமும் வழங்கப்படவுள்ளது.

அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், விநோத நிகழ்ச்சிகள், மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள், பொருட்காட்சி, விற்பனை, கௌரவிப்பு விழா ஆகியன இடம்பெறும்.

## தமிழ் கலாசார முறைப்படி உடை அணிய வேண்டும்
### குருநகர்பங்குத்தந்தைவேண்டுகோள்

(விசேடநிருபர்)
கிறிஸ்து உயிர்ப்பு விழா ஆராதனைகளில் கலந்து கொள்ளும் மக்களை தமிழ்ப் பண்பாட்டுக்கு அமைய எதிர்வரும் உயிர்த்த ஞாயிறு தினத்தில் பெண்கள் சேலை உடுத்தி கூந்தலுக்கு மலர் மாலைகள் தரித்து தமிழ்ப் பண்பாட்டுக்கமைய

## பாண்டிருப்பில் புத்தாண்டுவிழா சிறப்பாக நடைபெறுகின்றது

பாண்டிருப்பு இளைய தலைமுறையினர் நடாத்தும் மாபெரும் புத்தாண்டு விழா மூன்று தினங்களுக்கு பாண்டிருப்பு துரௌபதை அம்பாள் ஆலய வீதியில் இம்முறை வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி, பத்து கிலோ மீற்றர் மரதன் ஓட்டப்போட்டி, 85 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டிகள், வினோத விளையாட்டுக்கள், நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள் ஆகியவைகள் இடம்பெறவிருக்கின்றன. (48)

இறுதிக் கலை நிகழ்ச்சிகளாக பாண்டிருப்பு கலைஞர்கள் வளங்கும் ''நீயின்றி நானில்லை கண்ணா'' என்னும் நாடகமும், காரைதீவு விபுவாநந்தா மத்திய கல்லூரி முத்தமிழ் மன்றம் வழங்கும் ''விதியின் வழியே'' என்னும் சமூக நாடகம் இடம் பெறும். இத்துடின் வெண்ணிலாஇசைக்குழுவின் இசைத் தென்றல் நிகழ்ச்சியை அடுத்து திரு. சிரயேஸ் நன்றியுரையுடன் விழா முடிவுறும்.

## சாவகச்சேரியில் ஆண், பெண் சைக்கிள் ஓட்டப்போட்டி

இன்று அன்னை பூபதி கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் தென்மராட்சி மாணவர் இயக்கமும், கலை கலாசார அவையினரும் இணைந்து விளையாட்டுப் போட்டியினையும் ஓர் எழுச்சி ஊர்திப்பவனியும் நடாத்துகின்றார்கள்.

ஆண்களுக்குரிய 60 மைல் சைக்கிள் ஓட்டமும் பெண்களுக்குரிய 20 மைல் சைக்கிள் ஓட்டமும் காலைஆறுமணிக்கு ஆரம்பமாகும். எழுச்சிஊர்தி பிற்பகல் 2 மணிக்கு மிருசுவில் பன்னிருவர் நினைவுத்தூபி முன்பாக ஆரம்தத்து சாவகச்சேரி நகரமைதானத்தில் முடிவடையும். கடந்த ஒரு வார காலமாக அன்னை பூபதி நினைவாக பலதரப்பட்ட போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்றமைகுறிப்பிடத்தக்கது.

### வரலாற்றுக் ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பிடத்தக்கது.

மேலும் இவ் வாழ்த்துச் செய்தியில் எமது தேசிய விடுதலை போராட்டத்தில் நாம் எத்தனையோ தடைகளை சந்தித்திருக்கிறோம். நாம் சந்தித்தமிகப் பெரியதடை இந்திய ஆக்கிரமிப்பாகும். இந்தியஆக்கிரமிப்புடன் விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்படும். தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போர் அழிக்கப்படும் என்றே உலகம் எதிர்பார்த்தது. எமது இயக்கத்தின் தலைவர் திரு. வே. பிர

### புனரமைப்புத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கம், திருமதி பாலசிங்கம், யாழ்மாவட்டப் பொறுப்பாளர் பானு, யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் டொமினிக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்றுக்காலை 9.00 மணி அளவில் விமானத்தில் பலாலி வந்து சேர்ந்த அமைச்சர் ஹமீத்தை விடுதலைப் புலிகள் தமது பாதுகாப்பில் மோட்டார் பவனியாக நல்

### கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை சேமிப்புப் புத்தகம்

(கரவெட்டி)
பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி, புஸ்பராஜா மதனயோகினி என்பவரது அடையாள அட்டையும் இலங்கை வங்கிச் சேமிப்புப் புத்தகமும் அனாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்டு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சிச் செயலகத்தில் (பருத்தித்துறையில்) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் காரியாலயத்தில்

### சுயதொழில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
செய்துள்ளார்கள். பகுதிக் கிராமசேவையாளரின் தலையீட்டால் அட்டையை மீளப்பெற்று, சம்பந்தப்பட்டவரின் மனைவி வங்கியில் பணத்தை எடுத்துள்ளார்.

### சுதந்திர......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
முன்னணியின் பொறுப்பாளர் திரு. பாரதி அவர்கள் தமதுரையில், விடுதலைப் போரில் இளைஞர்கள் மட்டும் பங்கு கொண்ட காலம் மாறி, சகல மக்களும் இணைந்து போராட வேண்டிய காலம் வந்துவிட்டது என்று கூறினார், சகல மக்களும் இணைந்தால் விரைவில் நமது உரிமைகளை வென்றெடுக்க முடியுமென்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிக்கு மாந்தை-மேற்கு பிரஜைகள் குழுத் தலைவர் பா. ஞானசோதி தலைமை வகித்தார். மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எம். பி. முதலி மாந்தைத்திடல் கிற்றூரவைத் தலைவர் திரு. எஸ். செல்வம் பொருளாளர், திரு. ம. நமசிவாயம் பாலைக்குழி சிற்றூரவை செல்வி. பாக்கியவதி, திருக்கல் சிற்றூரவைத் தலைவர் ஜனாப் ஏ. ஏ. கபூர் ஜே பி., கறுப்பர்க்குளம் சிற்றூரவைத் தலைவர் ஜனாப் ஜாஸின், வண்ணாக்குளம் சிற்றூரவைத் தலைவர் மா. நடராசா, அடம்பன் சிற்றூரவைச் செயலாளர் திரு, அமிர்தரத்தினராசா, நெடுங்கண்டல் சிற்றூரவை எஸ். சுதாகர், பரப்புக்கடந்தான் சிற்றூரவைச் செயலாளர் திரு

அமைச்சரவை இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்தப் பங்குகளை வழங்குவதால் ஏற்படும் செலவையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும்.

## புனரமைப்புத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம், திருமதி பாலசிங்கம், யாழ்மாவட்டப் பொறுப்பாளர் பானு, யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் டொமினிக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்றுக்காலை 9.00 மணி அளவில் விமானத்தில் பலாலி வந்து சேர்ந்த அமைச்சர் ஹமீத்தை விடுதலைப் புலிகள் தமது பாதுகாப்பில் மோட்டார் பவனியாக நல்லூரிற்குக் கொண்டு வந்தனர். அப்போது அமைச்சர் வந்த வீதி எங்கும் விடுதலைப் புலிகள் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இச் சந்திப்பின் போது பிரதானமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களின் சட்ட ஒழுங்கு பிரச்சினை பற்றி முக்கியமாக விவாதிக்கப்பட்டது. அத்தோடு கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் தொடர்பான பிரச்சினையும் ஆராயப்பட்டது.

இப் பேச்சுவார்த்தையின் முடிவில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெற வேண்டிய புனர் நிர்மான புனருத்தாரண அபிவிருத்தி வேலைத்திட்டங்களைக் சரியான முறையில் விரைவாக செயற்படுத்துவதாகவும், வல்வெட்டித்துறை. பருத்தித்துறை காவல் நிலையங்களை மீண்டும் திறப்பது பற்றியும் முடிவெடுக்கப்பட்டது மேலும் வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் சிலவற்றைத் தீர்ப்பதாகவும் முடிவெடுக்கப்பட்டது.

## யாழ்.வங்கிகளில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வங்கியில் இது நடைமுறைப் படுத்தப்படடது.

பொலிசார் உதவியின்றி இம்முறை புதுவருடத் தினத்தில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்புடன் வங்கிகளில் கருமங்கள் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை வங்கி இன்று மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் விசேட கரும பீடத்தில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

இதேபோல் மக்கள் வங்கி கிளைகள், யாழ். வர்த்தக வங்கி ஆகியவற்றிலும் புத்

மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை செய உள்ளதாக அவர் தெரிவித்தார். (லோ)

## வரலாற்றுக் ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடத்தக்கது.

மேலும் இவ் வாழ்த்துச் செய்தியில் எமது தேசிய விடுதலை போராட்டத்தில் நாம் எத்தனையோ தடைகளை சந்தித்திருக்கிறோம். நாம் சந்தித்தமிகப் பெரியதடை இந்திய ஆக்கிரமிப்பாகும். இந்தியஆக்கிரமிப்புடன் விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்படும். தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போர் அழிக்கப்படும் என்றே உலகம் எதிர்பார்த்தது. எமது இயக்கத்தின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் வழி நடத்தலாலும, உறுதிமிக்க எமது போராளிகளினதும், மக்களினதும் போராட்டத்தாலும் இந்திய ஆக்கிரமிப்பு எமது மண்ணில் தோல்விகண்டது.

தென்னாசியப் பிராந்தியத்தில் இருக்கும் சிறியநாடுகள் மீது தனது வல்லாதிக்கத்தை இராணுவ பலம் மூலம் செலுத்தி வந்த இந்தியாவிற்கு புலிகள் இந்தியப் போர் ஒரு பாடமாக அமைந்தது.

சுதந்திர உணர்வு கொண்ட மக்களின் விடுதலை வேட்கையை எந்த வல்லரசாலும் அடக்க முடியாது என்பதைத் தான், தமிழீழ விடுதலைப் போராட்டம் நிரூபித்துள்ளது

இந்தியா தமிழீழ மக்களின் போராட்டத்தில் உள்ள நியாயங்களை அங்கீரிக்க மறுத்து, தமிழீழப் போராட்டத்தை அழிப்பதிலேயே அக்கறையாக இருந்தது.

தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை இந்திய வல்லாதிக்கப் பூதத்திடமிருந்து காப்பாற்ற வேண்டிய வரலாற்றுக்கடமை எம் மீது சுமத்தட்பட்டிருந்தது.

எமது போராளிகளினதும் மக்களினதும் அளப்பரிய தியாகங்களால் நாம் எமது கடமையை செய்து முடித்துள்ளோம்.

எமது போராட்டம் அடக்கப்படும், ஒடுக்கப்படும் பல தேசிய இனங்களுக்கு நம்பிக்கையையும், புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தியதோடு வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது. இவ்வாறு விடுதலைப்புலிகள் பத்திரிஸக தெரிவித்துள்ளது.

தாண்டு தினத்தையொட்டி சில சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை சேமிப்புப் புத்தகம்

(கரவெட்டி)

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி, புஸ்பராஜா மதனயோகினி என்பவரது அடையாள அட்டையும் இலங்கை வங்கிச் சேமிப்புப் புத்தகமும் அனாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்டு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சிச் செயலகத்தில் (பருத்தித்துறையில்) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் காரியாலயத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர். (18)

## பவனி சென்ற சாரண ஆசிரியர் வழியில் பலி

(கொழும்பு)

தமிழ் - சிங்களப் புதுவருடத்தைத் தேசிய ஒருமைப்பாட்டுத் தினமாகக் கொண்டாடுவதற்கு, ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்று வடபகுதியிலிருந்து சைக்கிள் பவனியாக ஜனாதிபதிக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காகச் சென்று கொண்டிருந்த சாரணர்களுடன் சென்ற ஆசிரியர் ஒருவர் வழியில் காலமானார்.

சைக்கிள்களில் சென்று கொண்டிருந்த சாரண ஆசிரியர் ஒருவர் சிலாபத்தில் மயங்கி வீதியில் விழுந்தபோது பின்னால் வேகமாக வந்த லொறி அவரை நசுக்கிக் கொன்றுவிட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இப்புத்தாண்டில்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தினத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் தமிழ் சமூகத்தின் விடிவிற்காக போராளிகளாக மாறினோமே தவிர குழப்பவாதிகள் அல்ல என்பதை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற சகல சமூகத்தினரும் இன்று நன்கு புரிந்துள்ளனர். எனவே ஜனநாயக வழியிலும், வாழ்விலும் நம்பிக்கை கொண்ட தமிழ் பேசும் சமூக மக்கள் அவ்வழிக்கு வந்துள்ள எமக்கு பூரண ஆதரவை வழங்க வேண்டும் என புத்தாணடு வேண்டுகோள் விடுக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

திருநாட் கொண்டாட்ட விழாவில், அரியாலையைச் சேர்ந்த மறைந்த வீர வேங்கைகளில் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளதோடு, போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியோர்களுக்கு அன்னை பூபதி

பெறவிருக்கும் இவ் விழாவில் விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், விநோத நிகழ்ச்சிகள், மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள், பொருட்காட்சி, விற்பனை, கௌரவிப்பு விழா ஆகியன இடம்பெறும்.

# தமிழ் கலாசார முறைப்படி உடை அணிய வேண்டும்

## குருநகர்பங்குத்தந்தைவேண்டுகோள்

(விசேட நிருபர்)

கிறிஸ்து உயிர்ப்பு விழா ஆராதனைகளில் கலந்து கொள்ளும் மக்களை தமிழ்ப் பண்பாட்டுக்கு அமைய ஆடைகளை அணிந்து வரும்படி குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண - பி. எம். இமானுவேல் அடிகள் பகிரங்க வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார்.

எதிர்வரும் உயிர்த்த ஞாயிறு தினத்தில் பெண்கள் சேலை உடுத்தி கூந்தலுக்கு மலர் மாலைகள் தரித்து தமிழ்ப் பண் பாட்டுக்கமைய ஆலய ஆராதனைகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுள்ளது திருச்சபை சரித்திரத்தில் முதல் முயற்சி என்று தெரிவிக்கப்படுகிறது. (21)

## முல்லைத்தீவு நிவாரணம் திரும்பிவிடுமா?

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சேதமடைந்த வீடுகளை திருத்துவதற்காக புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்ட பத்துக்கோடி ரூபா திரும்பிச் செல்லவுள்ளது.

வீடுகள் அழிவு, சேதம் குறித்து அரசாங்க அதிபருக்கு விண்ணப்பங்கள் அனுப்பப் படாததாலேயே இந்த நிதி திருப்பியனுப்பப்படவுள்ளதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

வீடுகளைத் திருத்தவழங்கப் படும் பதினையாயிரம் ரூபா நன்கொடைப் பணத்தைப் பெறுவதற்கு ஏழாயிரம் பேர் தகுதியுடையவர்களாக இருந்தும் நூற்றிநாற்பது பேரிடமிருந்தே விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (58)

## யாழ் வைத்தியசாலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியரை அவசரமாக அழைப்பதென்றாலும் அம்புலன்ஸ் வாகனமே பாவிக்கப்படுகிறது. என்றும் அவர் கூறினார்.

இதற்குத் தாம் பலமுறை சுகாதர திணைக்களத்திடம் முறையிட்டுள்ளதாகவும் ஆனால் எதுவித நடவடிக்கையும் இன்னும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். (லோ)

## ஈரான் பேரீச்சம்பழம் அன்பளிப்பு

(கொழும்பு)

இருபதாயிரம் கிலோ பேரீச்சம்பழங்களை இலங்கைக்கு ஈரான் அன்பளிப்புச் செய்துள்ளது. இருநாடுகளுக்கிடையிலான நட்புறவுச் சின்னமாக இந்த அன்பளிப்பு வழங்கப் படுகின்றது என்று ஈரானிய தூதரகப் பொறுப்பதிகாரி ஏ. ஆர். பராஜீராய் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டிலுள்ள பள்ளிவாசல்கள் மற்றும் இஸ்லாமிய நிலையங்களிடையே இந்த பேரீச்சம்பழம் விநியோகிக்கப்படும்.

## விளையாட்டு உத்தியோகத்தர் இல்லை

(யாழ் விளையாட்டு நிருபர்)

வடமராட்சிப் பிரிவிலுள்ள மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிகளிலும் விளையாட்டு உத்தியோகத்தர்கள் இதுவரைக்கும் நியமிக்கப்படவில்லை.

கரவெட்டி, பருத்தித்துறை மருதங்கேணி ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளிலேயே விளையாட்டு உத்தியோகத்தர் இல்லாத நிலை உள்ளது. (42)

களுக்குரிய 20 மைல் சைக்கிள் ஓட்டமும் காலைஆறுமணிக்கு ஆரம்பமாகும். எழுச்சிஊர்தி பிற்பகல் 2 மணிக்கு மிருசுவில் பன்னிருவர் நினைவுத்தூபி முன்பாக ஆரம்தத்து சாவகச்சேரி நகரமைதானத்தில் முடிவடையும். கடந்த ஒரு வார காலமாக அன்னை பூபதி நினைவாக பலதரப்பட்ட போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்றமைகுறிப்பிடத்தக்கது.

## சுயதொழில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளார்கள். பகுதிக் கிராமசேவையாளரின் தலையீட்டால் அட்டையை மீளப்பெற்று, சம்பந்தப்பட்டவரின் மனைவி வங்கியில் பணத்தை எடுத்துள்ளார். அட்டையை ஈடு கொடுத்தவர் வட்டியில்லாமல் பணத்தைப் பெற்றுக் கொண்ட சம்பவமொன்று இப்பகுதியில் நடந்துள்ளது, (44)

தலைமை வகித்தார். மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எம். பி. முதலி மாந்தைத்திடல் கிற்றூரவைத் தலைவர் திரு. எஸ். செல்வம் பொருளாளர், திரு. ம. நமசிவாயம் பாலைக்குழி சிற்றூரவை செல்வி. பாக்கியவதி, திருக்கல் சிற்றூரவைத் தலைவர் ஜனாப் ஏ. ஏ. கபூர் ஜே பி., கறுப்பர்க்குளம் சிற்றூரவைத் தலைவர் ஜனாப் ஜாஸின், வண்ணாக்குளம் சிற்றூரவைத் தலைவர் மா. நடராசா, அடம்பன் சிற்றூரவைச் செயலாளர் திரு, அமிர்தரத்தினராசா நெடுங்கண்டல் சிற்றூரவை எஸ். சுதாகர், பரப்புக்கடந்தான் சிற்றூரவைச் செயலாளர் திரு பாரதிதாசன், அடம்பன் மத்திய மகாவித்தியாலய விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பைச் சேர்ந்த செல்வி, விஜயசிறி ஆகியோர் பேசினர்

## ஓராண்டு நினைவஞ்சலி

வீரவேங்கை

# மேஜர் சுபாஸ்

( பு. உதயகுமார் )

வீர உதயம்:- 03 . 03 . 1965

வீர சொர்க்கம்:- 14 . 04 . 1989

திதி:- 03 . 05 . 1990

தர மறுத்த உரிமை பெறத்
தம்பியின் பாதையிலே
தமிழ் மண்ணின் விடிவுக்காய்த்
தயங்காது போராடி
பொழுது சாயும் வேளையிலே
குண்டு வெடிப்பில்
பொன்னான உன்னுயிரைத்
துடிதுடித்தே இழந்தாயே
உன்னுடல் சிதறிய இடத்தின்
செந்நிறமும் மாறி விட்டது
என்றும் எம் இதயங்களில்
உன்னுருவம் அழியாத ஓவியம்.

03 . 05 . 1990 வியாழக்கிழமை பகல் 10 . 00 மணியளவில் நடைபெறவுள்ள ஆண்டுத் திவசக் கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்படியும், மதிய போசனத்தில் பங்குபற்றுமாறும் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

பெற்றோர்,
சகோதரர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது

### சிந்தனைக்கு

ஒளிபடைத்த கண்ணினாய் - வாவாவா
உறுதி கொண்ட நெஞ்சினாய் - வாவாவா

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 14 - 04 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

## நம்பிக்கையூட்டும் புத்தாண்டு

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இன்று புது வருடத்தை மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறார்கள்.

ஒளிமயமான எதிர்காலம் அமையவேண்டும் என்ற நம்பிக்கையோடு புதுவருடத்தை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறார்கள்.

''இன்றுபோல் என்றும் வாழ்க'' என்று மற்றவர்களையும் வாழ்த்தி தாமும் இன்றுபோல் என்றும் வாழவேண்டுமென்று இன்றைய புத்தாண்டுத் தினத்தை சுற்றம் சூழ ஆனந்தமாகக் கொண்டாடுகிறான்!

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இன்று பிறந்துள்ள புத்தாண்டு நம்பிக்கை ஒளி ஊட்டுவதாக அமைந்துள்ளதென்பதை மறுக்க முடியாது.

கடந்த இரண்டு வருடங்கள் அந்நிய இந்திய இராணுவம் வீதிகளிலும், வீடுகளிலும் கால்நடை பவனியாகச் சென்றுகொண்டிருக்க, திடீர்ச்சோதனைகள் நடத்த துப்பாக்கி வேட்டுக்களின் ஒலி திடீரெனக் கேட்க கொள்ளைக் கோஷ்டிகள் எச்சமயத்தில் என்ன செய்யுமோ என்ற அச்சமும் பீதியும் மனதில் குடிகொண்டிருக்கும். ஆலயத்துக்குக்கூடச் செல்ல முடியாத நிலையில் புத்தாண்டை அடுத்து என்ன நேருமோ என்ற நிலையில் வரவேற்றதைத் தமிழ் மக்கள் மறந்துவிட முடியாது.

கடந்த சில வருடங்களாக புத்தாண்டு ஏன் பிறக்கிறது; பண்டிகைகள் எதற்காக வருகின்றன என்று கேட்கும் நிலையில் தமிழ் மக்கள் அவல வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

இந்தக் கஷ்டங்கள் நீங்கி நாட்டில் இன்று சாந்தியும் சமாதானமும் நிலவும் சூழ்நிலையில் புத்தாண்டை மக்கள் மகிழ்ச்சியுடனும் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையுடனும் வரவேற்கிறார்கள்.

இதேசமயம் இன்று நிலவும் அமைதியையும் சாந்தியையும் குலைப்பதற்கு உள்நாட்டு வெளிநாட்டுத்

# தமிழர் புத்தாண்டு நம்பிக்கையூட்டும் திருநாள்

தமிழ்ப் புத்தாண்டு நாம் கொண்டாடும் விழாக்களுள் தனித்துவமானது. எமது வாழ்வில் புதிய உணர்வுகளைத் தோற்றுவிப்பதோடு, நம்பிக்கையூட்டும் விழாவாகவும் விளங்குகின்றது, அறிவியல் ரீதியாகவும், சோதிட ரீதியாகவும் புத்தாண்டு முக்கியத்துவம் பெறுகின்றது.

தமிழர்கள் கொண்டாடும் விழாக்களில் பெரும்பாலானவை எமக்கு நல்வாழ்வளிக்கும் சூரியனோடு தொடர்புடையவை. சூரிய வெப்பமின்றி எம்மால் எத்தகைய ஆக்கபூர்வமான காரியங்களையும் செய்ய இயலாது. உயிரினங்கள் உண்டாவதற்கு இது துணை செய்வதால் சூரியன் ஆக்கும் சக்தியாகச் சிறந்து விளங்குகின்றான். அளவான ஒளியால் உயிரினங்கள் உணர்வையும். ஊக்கத்தையும் பெறுவதால் சூரியன் காக்கும் சக்தியாகவும் விளங்குகின்றான். சூரியனின் ஒளியைக் கொண்டு இன்றைய விஞ்ஞான உலகு எத்தனையோ ஆக்கபூர்வமான காரியங்களைச் சாதிக்க முயல்கின்றது.

சூரியன் வடக்கு நோக்கி நகரத்தொடங்கி, மகர ராசியில் பிரவேசிக்கும் தை மாதத்தில் முதல் நாள் தைப்பொங்கல் என்ற நிலையில் சூரியனுக்குப் பொங்கலிட்டு வழிபடுவர். இதனை உழைக்கும் உழவர் திருநாள் எனவும் தமிழர் திருநாள் எனவும் போற்றுகின்றோம். சூரியன் வடக்கு நோக்கி சஞ்சரிக்கும் காலம் உத்தராயணம் எனவும், தென் பகுதியில் சஞ்சரிக்கும் போது தக்ஷிணாயணம் என்றும் குறிப்பிடுவர்.

இந்த உத்தராயண காலப் பகுதியில் வருவதே தமிழர்களது முக்கிய இரு பண்டிகைகளாகிய தைப்பொங்கலும், தமிழர் புத்தாண்டுமாகும்.

சூரியன் சித்திரை முதல் நாள் மேட ராசியில் பிரவேசிக்கும் நாளே புத்தாண்டாகும். சூரியனது இப்பிரவேசம் விஷு புண்ணிய காலம் என்பர். இக்காலப் பகுதியிலே வருடப்பிறப்புக்குரிய கொண்டாட்டங்களும் மரபு ரீதியாக ஆரம்பமாகின்றன.

வருடப்பிறப்பு எமது கடந்த கால வாழ்க்கையில் நிகழ்ந்த துயரச் சம்பவங்களை மறந்து புத்துணர்வுடனும், புதிய தெம்புடனும், நம்பிக்கையோடும் புதிய வருடத்தில் வாழத்தக்க சம்பிரதாயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

வருடப்பிறப்பையொட்டி எமது இல்லங்களும், சூழலும் தூய்மை பெறுகின்றன. புத்தாண்டு தினத்தில் மருத்து நீர் தேய்த்து நீராடுவது ஒரு முக்கிய சம்பிரதாயமாகும். இயற்கையிலிருந்து பெறப்பட்ட மூலிகைகளைக் கொண்டு காய்ச்சிய நீரே மருத்துநீர். தேகசுகம், உடற் சுத்தம் இதனால் கிட்டுகின்றது. நீராடி, புத்தாடை பூண்டு, தெய்வ வழிபாட்டில் ஈடுபடுதலும் குரு, பெற்றோர் ஆகியோரிடம் ஆசிபெறுதலும் முக்கிய சம்பிரதாயங்கள். அன்றைய தினம் ஏழை, எளியோருக்கு ஏற்ற உதவிகளைச் செய்து நாமும் வாழ்ந்து வசதி குறைந்தோருக்கும் உதவியளித்தலும் குறிப்பிடத்தக்க மரபாகும். இவ்வகையில் எமது வாழ்க்கையின் எதிர்காலத்திற்கு நம்பிக்கையூட்டுவது தமிழர் புத்தாண்டு.

கலாநிதி ப.கோபாலகிருஷ்ணன்

## மயிலிட்டியில் உண்ணாவிரதம்

மயிலிட்டியில் கடந்த சனிக்கிழமை கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் அன்னை பூபதி நினைவாக ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் நடைபெற்றது.

வலிகாமம் பொறுப்பாளர் சி.ஆஞ்சநேயர், மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி. சித்திரா உட்பட பலர் இந்த வைபவத்தில் உரையாற்றினார்கள்.

## அஞ்சலிக்கூட்டம்

(தீவுப்பகுதி)

அல்லைப்பிட்டி, பருத்தியடைப்பு ஆகிய இடங்களில் அன்னை பூபதிக்கு அஞ்சலிக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன

தீவகப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ அரசியல் பொறுப்பாளர் திரு. காந்தி உட்பட பலர் இங்கு உரையாற்றினார்கள்.

# நல்லை ஆதீன முதல்வர் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்து

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஆதீன முதல்வர் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தி.

பிரமோதூதப் புத்தாண்டு இந்நாட்டு மக்களுக்கும், 'ஈழநாத' நிறுவனத்துக்கும் மங்களகரமாக அமைய வேண்டும். ஈழநாதம் எங்கும் கேட்கப்படுகிறது. இன்னொரு வகையில் கூறுவதானால் எல்லோரும் கேட்டு வாங்கிப் படிக்கிறார்கள். இப்பொழுது தவ்வல் பருவக் குழந்தையாகத் தவழும் இப்பிள்ளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதை அவதானிக்கிறோம். மக்களிடையே நன்மதிப்பைப் ஈட்டியுள்ளது. இவை வெறும் புகழ்ச்சியல்ல.

கூரிய வாளால் சாதிக்க முடியாததை பத்திரிகை எழுத்தாளரின் பேனாமுனை சாதித்துவிடும். சத்தியம், நடுநிலைமை காலத்துக்கேற்ப மக்கள் விரும்பும் படைப்புகள் இவைதான் அவர்களின் ஆயுதங்கள். நாம் இடர்' இன்னலுற்ற காலம் மறைந்து ஒளிவீசும் மலர்ந்த காலம் தென்படுகிறது. இப்புத்தாண்டில் மட்டுமல்ல எஞ்ஞான்றும் இந்நாட்டு மக்கள், தெய்வ நம்பிக்கை, பரோபகார சிந்தனை, ஒற்றுமை, ஒத்துழைப்பு, அன்பு, அறம் ஆதிய உயர் பண்புகளைக் கடைப்பிடித்து இன்புற்று. சீரோடும், சிறப்போடும், நலமே நீடு வாழ வேண்டுமென இறையருளை உளமாரத் தியானித்து எல்லோருக்கும் எமது நல்லாசிகளைவழங்குகிறோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்

## புதைத்து வைத்த வெடி வெடித்து ஒருவர் காயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கடற்கரையில் (பழைய தபால் நிலைய முன்பாக) புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதி வெடி ஒன்று வெடித்தமையால் குடும்பஸ்தரொருவர் காயமடைந்தார்.

காயமடைந்த இவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையைச்சேர்ந்த செல்லத்துரை குணசிங்கம் (வயது 39), என்பவரே காயமடைந்தவராவர்.

இவர் அருகாமையில் உள்ள தனது வீட்டைப் பார்வையிடச் சென்ற போதே கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடி வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## கிழக்கில்

(மட்டக்களப்பு)

அன்னை பூபதி நினைவாக கரவெட்டி, விளாவெட்டுவான் ,பாலமீன்மடு, மஞ்சந்தொடுவாய், புளியங்குடா, சித்தாண்டி குடியிருப்பு, திருப்பொருந்துறை உட்பட பதினைந்து கிராமங்களில் அடையாள உண்ணா விரதம் மேற்கொள்ளப்பட்டன.

### கிளிநொச்சி உதவி உள்ளூராட்சி ஆணையாளர்

# கிராமங்களில் சனசமூக நிலையங்களை நிறுவ மக்களின் அறிவைப் பெருக்க முன்வரவேண்டும்

(கிளிநொச்சி)

பொது அறிவை மக்களுக்கு ஊட்டக்கூடியளவுக்கு சகல வசதிகளையும் கொண்ட சனசமூக நிலையங்களை அமைக்க வசதி படைத்த மக்களும், உதவ சனசமூக நிலையங்களைத் தவிர வேறு ஸ்தாபனங்களோ, சாதனங்களோ இல்லை.

ஆதலால் கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்

ஒவ்வொரு மனிதனும் அறிவாளியாக வாழ வேண்டும். அறிவாளிகளைக் கொண்ட நாடுதான் சகல துறைகளிலும் முன்னேற முடியும்.

இரண்டாம் உலக மகாயுத்

## ''படையினரைக் கண்காணியுங்கள்'' புலிகள் ஆலோசனை

(திருக்கோணமலை)

ஜனாதிபதி ஆர் பிரேமதாஸாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடக்கும் பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் எண்ணத்துடன் பாதுகாப்புப்படையினர் முரட்டுத்தனமான பலாத்காரச் செயல்களில் ஈடுபடாமல் கண்காணித்துக் கொள்ளும்படி திருக்கோணமலையிலுள்ள பாதுகாப்புப் படைகள் உயர் அதிகாரிகளுக்கு விடுதலைப் புலியினர் அழுத்திச் சொல்லியுள்ளனர்.

திருக்கோணமலையில் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நடைபெற்ற இரு அசம்பாவிதங்களைத் தொடர்ந்தே விடுதலைப் புலிகள் மேற்கண்டவாறு கூறினார்களாம்.

குடிகொண்டிருக்கும். ஆலயத்துக்குக்கூடச் செல்ல முடியாத நிலையில் புத்தாண்டை அடுத்து என்ன நேருமோ என்ற நிலையில் வரவேற்றதைத் தமிழ் மக்கள் மறந்துவிட முடியாது.

கடந்த சில வருடங்களாக புத்தாண்டு ஏன் பிறக்கிறது; பண்டிகைகள் எதற்காக வருகின்றன என்று கேட்கும் நிலையில் தமிழ் மக்கள் அவல வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

இந்தக் கஷ்டங்கள் நீங்கி நாட்டில் இன்று சாந்தியும் சமாதானமும் நிலவும் சூழ்நிலையில் புத்தாண்டை மக்கள் மகிழ்ச்சியுடனும் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையுடனும் வரவேற்கிறார்கள்.

இதேசமயம் இன்று நிலவும் அமைதியையும் சாந்தியையும் குலைப்பதற்கு உள்நாட்டு வெளிநாட்டுத் தீயசக்திகள் முனைந்துகொண்டிருக்கின்றன என்பதை மனதிலிருத்தி எச்சரிக்கையாகவும் மக்கள் நடந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இன்றைய அமைதியைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் தங்கள் இலட்சியத்தை மறந்துவிடக் கூடாது.

இன்றைய சூழ்நிலையை எதிர்கால வளமான வாழ்வுக்குப் பயன்படுத்த வேண்டுமே தவிர இன்றைய அமைதியையும் சாந்தியையும் கண்டு ஏமாந்துவிடக்கூடாது.

நாட்டில் அமைதி நிலவுகிறதென்றும் புத்தாண்டை சிங்கள தமிழ்த் தேசிய நாளாக விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இது நல்ல செய்திதான்; கடந்த காலங்களில் இலங்கையில் தேசீயம் எப்படி இருந்தது; சிங்கள பேரினவாத அரசியல்வாதிகள் தேசீயம் என்பதற்கு என்ன அர்த்தம் கொண்டிருந்தனர் என்பதை நினைவுகூர வேண்டியது அவசியம்.

தேசீயம் என்ற மாயையில் தமிழ் இனம் தன்னை மறந்துவிடக்கூடாது; மறைத்துக்கொள்ளவும் இடமளிக்கக்கூடாது.

புத்தாண்டு தமிழ் மக்கள் சுதந்திரமாகவும்; சுபீட்சமாகவும் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் வாழ்வும் ஒளிமயமான எதிர்காலம் அமையவும் வழிவகுக்க வேண்டும்.

## இரவு நேரம் கடை உடைத்து கொள்ளை

(பருத்தித்துறை)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மந்திகை மக்கள் கடை இரவு வேளையில் உடைக்கப்பட்டுச் சுமார் 10, 000 ரூபா பெறுமதியான பாவனைப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மந்திகைச் சந்தைக்கு முன்புறமாகவுள்ள இம் மக்கள் கடை கொள்ளை சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (25)

## மாதகல் பகுதிக்கு நிவாரணம்

மாதகல் பகுதியில் செய்தொழில் விவசாயப் பாதிப்பு நிவாரணம் ரூபா 4000/- 208 பேருக்குகு மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளைக்கு வந்து சேர்ந்துள்ளது.

அடுத்துவரும் நிவாரண கொடுப்பனவு திகதியில் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் கொடுப்பனவுகள் நடைபெறும் என மாதகல் கிராமசேவை உத்தியோகத்தர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி தெரிவித்துள்ளார். (47)

கப்படுகிறது. இன்னொரு வகையில் கூறுவதானால் எல்லோரும் கேட்டு வாங்கிப் படிக்கிறார்கள். இப்பொழுது தவ்வல் பருவக் குழந்தை மக்கள் விரும்பும் படைப்புகள் இவைதான் அவர்களின் ஆயுதங்கள். நாம் இடர்' இன்னலுற்ற காலம் மறைந்து ஒளிவீசும் மலர்ந்த காலம் நல்லாசிகளைவழங்குகிறோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்

### கிளிநொச்சி உதவி உள்ளூராட்சி ஆணையாளர்

# கிராமங்களில் சனசமூக நிலையங்களை நிறுவ மக்களின் அறிவைப் பெருக்க முன்வரவேண்டும்

(கிளிநொச்சி)

பொது அறிவை மக்களுக்கு ஊட்டக்கூடியளவுக்கு சகல வசதிகளையும் கொண்ட சனசமூக நிலையங்களை அமைக்க வசதி படைத்த மக்களும், பொதுமக்களும் முன்வர வேண்டும்.

ஸ்ரீ காந்தா சனசமூக நிலைய புனரமைப்புக் கூட்டத்தில் பிரதம விருத்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. மு.குமாரதாசன் மேற்கண்டவாறு கூறினார். கனகபுரத்திலுள்ள ஸ்ரீகாந்தா சனசமூக நிலைய மண்டபத்தில் திரு. ஆ. பி இராசநாயகம் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

தொடர்ந்து பேசிய ஆணையாளர்;

மேலை நாடுகளில் பொது அறிவைப்பெற மக்களுக்குப் பல்வேறு ஸ்தாபனங்கள் உதவுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு உதவ சனசமூக நிலையங்களைத் தவிர வேறு ஸ்தாபனங்களோ, சாதனங்களோ இல்லை.

ஆதலால் கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்களை அமைத்து, மக்களின் பொது அறிவைப் பெருக்க சகலரும் முன்வரவேண்டும்.

அரசாங்கம் கொடுக்கும் நன்கொடைப் பணத்திற்குப் பத்திரிகைகளை வாங்கி சனசமூக நிலையத்தில் வைப்பதோடு எமது கடமை முடிந்துவிட்டதாக எவரும் எண்ணிவிடக்கூடாது. அங்கு வைக்கப்படுகின்ற பத்திரிகைகளை மக்கள் படிக்கவேண்டும்.

இது தவிர மக்களைக் கவரக்கூடியதும், இலகுவில் சகல விடயங்களையும் மக்கள் புரிந்து கொள்ளக்கூடியதுமான தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப்பெட்டிகள் போன்றவற்றைச் சனசமூக நிலையங்களில் பொருத்தி மக்களின் அறிவை வளர்க்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் அறிவாளியாக வாழ வேண்டும். அறிவாளிகளைக் கொண்ட நாடுதான் சகல துறைகளிலும் முன்னேற முடியும்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாடு யப்பான். அங்கு வாழ்ந்த மக்களின் அறிவும், விடாமுயற்சியும் தான் பாதிக்கப்பட்ட அந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப உதவியது.

சாம்பல் மேடாக இருந்த அந்த நாடு, இன்று பொருளாதாரத் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் முன்னேறி வறிய நாடுகளுக்கும், வளர்முக நாடுகளுக்கும் உதவி வருகிறது.

அறிவிலும், விடாமுயற்சியிலும் தமிழர்கள் அவர்களை விடஎந்தவகையிலும் குறைந்தவர்களல்லர். அவர்களுக்கு வாய்ப்பளிக்க சனசமூக நிலயங்கள் முன்வரவேண்டும் என்றார்.

கிளிநொச்சி உதவிஅரசாங்க அதிபர் திரு. எஸ். வேலுப்பிள்ளை, திரு. மு. சீவரெத்தினம், திரு. கனகேந்திரம் ஆகியோரும் பேசினர்.

பாதிக்கப்பட்ட

## அரச கூட்டுத்தாபன, சபை தமிழ் ஊழியர்கள் நிலை என்ன?

ஆசிரியர்,
ஈழநாதம்.

1983 ஆம் ஜூலைக் கலவரத்தின் பின் நாட்டின் தென் பகுதிகளில் ஏற்பட்டிருந்த நிலையினைத் தொடர்ந்து பல அரசாங்க, கூட்டுத்தாபன சபைகளில் கடமையாற்றிய பல தமிழ் ஊழியர்கள் தமது நிறுவனங்களிலிருந்து விலகி வடக்கு, கிழக்குப பகுதிகளுக்கு திரும்பினர்.

### மக்கள் மடல்

1987 ஆம் ஆண்டு செய்யப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் அரசாங்க சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் 1983 ஆம் ஆண்டு இனக்லம்வரங்களைத் தொடர்ந்து வேலையை விட்டு விலகிய சகல அரசாங்க ஊழியர்களுக்கும் மீண்டும் வேலை வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும் எனவும், வேலை வழங்குவது பற்றிய முடிவினை அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் தீர்மானிக்கலாம் எனவும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் அச்சுற்றறிக்கைகள் பிரகாரம் விண்ணப்பித்த பல அரச, கூட்டுத்தாபன, சபை ஊழியர்களுக்கு மீண்டும் நியமனங்கள் வழங்கப்படவில்லை.

நானும் அவ்வாறு பாதிக்கப்பட்ட ஊழியன் என்ற முறையில் இதற்குரியவர்களைத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

தி. லிங்கம்

## விபத்தில் காயம்

(பருத்தித்துறை)

நெல்லியடிச்சந்தியில் இடம்பெற்ற மோட்டார்- சைச்கிள் விபத்தில் வதிரி அரசடிப் பாடசாலைஅதிபர்.சைவப்புலவர்-எஸ். வேலாயுதம் காயமடைந்து மந்திகை வைத்தியசாடையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(மட்டக்களப்பு)

அன்னை பூபதி நினைவு வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர் வரும் 16ஆம் 17ஆம் 18ஆம் திகதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகளால் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (37

மேற்கொள்ளப்பட்டன. ளது. (25)

## "படையினரைக் கண்காணியுங்கள்" புலிகள் ஆலோசனை

(திருக்கோணமலை)

ஜனாதிபதி ஆர் பிரேமதாஸாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடக்கும் பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் எண்ணத்துடன் பாதுகாப்புப்படையினர் முரட்டுத்தனமான பலாத்காரச் செயல்களில் ஈடுபடாமல் கண்காணித்துக் கொள்ளும்படி திருக்கோணமலையிலுள்ள பாதுகாப்புப் படைகள் உயர் அதிகாரிகளுக்கு விடுதலைப் புலியினர் அழுத்திச் சொல்லியுள்ளனர்.

திருக்கோணமலையில் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நடைபெற்ற இந அசம்பாவிதங்களைத் தொடர்ந்தே விடுதலைப் புலிகள் மேற்கண்டவாறு கூறினார்களாம்.

## மட்டக்களப்பு நகரத்தில் மக்கள் கூட்டம் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

பல வருடங்களின் பின், மூன்பு எப்போதும் இல்லாதவாறு மட்டுநகர் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகிறது.

காலையிலிருந்து மாலை வரை நகரம் விழாக்கோலமாகக் காட்சியளிக்கிறது.

புலிகளின் நிர்வாகம் வந்ததிலிருந்து மக்கள் பயம் தீர்ந்து மகிழ்வோடு புதுவருடத்தைக் கொண்டாடுவதற்கான முன் ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கடைத்தெருக்களிலும், சந்தையிலும் சன நெரிசல் அதிகமாக இருக்கிறது.

புதன்கிழமை மாலையிலிருந்தே புதுவருடத்தை வரவேற்கும் பட்டாசு வெடியோசைகள் பல திசைகளிலும் கேட்கத் தொடங்கிவிட்டன.

## பொன் விழா நிகழ்ச்சி

(வட்டுக்கோட்டை)

அராலி தெற்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலைத்தின் பொன் விழா நிகழ்ச்சிகளில் நாடகப் போட்டிகள் நடைபெற்றன.

நாடகப் போட்டியில் முறையே அராலி தெற்கு சிறுவர் கலைக்கழகம் 1ஆம் இடத்தையும் சங்கானை வெண்ணிலா நாடகமன்றம் 2 ஆம் இடத்தையும் அராலி வடக்கு கலைவாணி நாடக மன்றம் 3ஆம் இடத்தையும் பெற்றன.

ஆண்கள், சிறுவர், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும், மரதன் ஓட்டம், கயிறு இழுத்தலும் நடைபெற்றன.

சித்திரை வருடப் பிறப்பன்று இயல், இசை, நாடகம் என்பன மாலை நிகழ்ச்சிகளாக நடைபெறும். (47)

## அன்னை பூபதிக்கு அஞ்சலி ஓடம்

கோட்டை முனைப்பாலம், கல்லடிப் பாலங்களுக்கு நடுவே உள்ள மட்டக்களப்பு வாவியில் அன்னை பூபதியின் நினைவு அஞ்சலி ஓடம் ஒன்று விடப்பட்டு இருக்கிறது.

இவ்வோடம் வெள்ளை, கறுப்பு, சிகப்பு, மஞ்சள் வண்ணக் கடுதாசிக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

## மாணவர் சுற்றுலா

(வந்தாறுமூலை)

நீண்ட கால இடைவெளிக்குப்பின் வந்தாறுமூலை ஸ்ரீ மகா விஷ்ணு வித்தியாலய மாணவர்கள் கடந்த 4 ஆம் திகதி ஒரு நாள் சுற்றுலாவினை மேற் கொண்டனர்.

மாணவர்களுடன் ஆசிரியர்களும் சென்றனர் பாசிக்குடா வாழைச்சேனை, காகிதஆலை போன்ற இடங்களை பார்வையிட்டனர். (29)

## லியோ கழகம் வேண்டுகோள்

மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலில் நடைபெறும் தேர் தீர்த்தத் திருவிழாக்களின் போடயாழ். பரியோவான் கல்லூரி லியோ கழகம் வட பிராந்தய புற்று நோயாளர் சங்கத்திற்கு நிதி சேர்கவுள்ளனர்.

இதற்கான உதவியை மனமுவந்து வழங்குமாறு அனைவரையும் லியோ கழகம் கேட்டுள்ளது.